குமரகுருபரன்



மலர் 16] 1965-ஆண்டு ஆனி-மீ 1-ம்வ (15-6-65) [இதழ் 6

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ 1½

17 JUN

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்

2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.

3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணாசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக்
கல்லூரி, திருநெல்வேலி.

5. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.,
ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., L. T.,
அசிஸ்ட்டண்டு கமிஷனர்.
H. R. & C. E. (Adm) Dept. Ramanad at Madura-2

7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

		பக்கம்
1	முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்–உரை நடை	297
2.	திருமந்திரம், ஐந்தாம் தந்திரம். (Tirumantiram Tantra the fifth) ...	299
3.	பித்தம்	303
4.	திருவாசக அநுபூதி உரை ...	307
5.	சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி	308
6.	கவிஞரும் கடவுளும் ...	309
7.	கல்லும் கனியும் ...	313
8.	சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அற்புதத் திருப் பதிகங்கள்	317
9.	திருவண்டப்பகுதி ...	319
10.	இகழ்வதுபோலப் புகழ்தல்	325
11.	Hymns of the Tamil Saivite Saints ...	328
12.	அரசியல் கிழார் சுந்தரனுர்	329
13.	மாரியல்லது காரியமில்லை ...	337
14.	புதுடில்லி ஸ்ரீசுவாமிநாத சுவாமி மந்திரில் (படிக் காசு) உதவிநிதி நிலப்பெறுமானம் ரூ. 30,000 ...	340
15.	Resolution at the meeting of the Board of Management, Sree Swaminatha Swami Samaj ...	344

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

குமரகுருபரன்

மலர் 16 | விசுவாவசு-ஹு ஆனித் திங்கள் 1-ம்வ [15-6-65] | இதழ் 6

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்
உரை நடை

பாலகவி வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

(மலர் 16. இதழ் 5-ன் தொடர்ச்சி)

கைக்கெட்டு மெட்டுக் களிற்றைப் பிடித்தக்
களிற்றோடு முட்டவிட்டுக்
ககனவட் டத்திநெடு பருதிவட் டத்தைவளை
திகிரிவட் டத்திலிட்டு
முக்கட் டிருத்தாதை கோதண்ட மெனவைத்த
வேதண்ட மாதண்டமா
முதண்ட கூடந்த்ரி கூடத் தொடுஞ்சாடி
மூரிக் கடாசலமவன்

மெய்க்கிட்ட சட்டைக்கு நேரிட் டிடப்பட்ட
மேகபட லத்துமொண்டு
மேல்கட லினைப்பெருங் கீழ்க்கடல் புகப்பெய்து
விளையாட்டு வீரர்களொடும்
திக்கெட்டும் விளையாடு சேனு பதிக்கடவுள்
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே. (14)

கைக்கு எட்டுகின்ற எட்டுத் திக்கு யானைகளைப் பிடித்து அவற்றை ஒன்ரேடொன்று மோதவிட்டும், ஆகாய வட்டத்தோடு சூரிய வட்டத்தைப் பிடித்து வளைந்த சக்கர வாள வட்டத்திலிட்டும், முக்கண்களையுடைய தமது அழகிய தந்தையாரது வில்லாகிய மேருமலையைப் பெரிய தணடாயுதமாகக் கொண்டு பழைய அண்ட கூடத்தையும் திரிகூட மலையையும் சாடியும், பெரிய யானையானது அந்த முக்கட் பெருமானது திருமேனிக்குக் கொடுத்த சட்டையாகிய தோலை ஒத்த மேகமண்டலத்திலே நீரை மொண்டு, மேல்கடலைப் பெரிய கீழ்க்கடலிலே புகும்படி செலுத்தி, உடனுக விளையாடுகின்ற நவ வீரர்களோடும் எட்டுத் திசைகளிலும் விளையாடுகின்ற சேனுபதிக் கடவுளே செங்கீரை யாடி யருளுவாயாக! செத்துப் பிறக்கின்ற தெய்வங்களுக்கு மணவாளனே செங்கீரை ஆடியருளுவாயாக!

(தொடரும்)

“ஞானசம்பந்தம்”

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனததிலிருந்து வெளி வருகிறது. சமயப்பொருள முதலியவை குறிதத தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர் வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க் கண்ட முகவரிககே அனுப்பிவைக்கவும்.

ஆணடுக் கையொப்பம்,

உள்நாடு ரூ. 2 – 25 * வெளிநாடு ரூ. 3 – 00

செயலாளர். “ஞானசம்பந்தம்” அச்சகம்.
தருமபுரம், மாயூரம் P. O.

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 16. இதழ் 5-ன தொடர்ச்சி

Sanmarga is the only path to finite goal
சன்மார்க்க நெறியன்றி முத்திக்கு நெறியில்லை

69. மார்க்கம் சன்மார்க்கிகள் கிட்டவகுப்பது
மார்க்கம் சன்மார்க்கமே யன்றி மற்றொன்றில்லை;
மார்க்கம் சன்மார்க்கமெனு நெறி வைகாதோர்
மார்க்கம் சன்மார்க்கமாம் சித்த யோகமே.

That alone is the Path Divine
The Sanmargis for the Goal ordain;
Other Path there is none,
Than this path to the One;
They that straight reach it not,
Through yoga's Path may climb it yet.

சன்மார்க்கிகள் முத்தியை அடையத் தகுந்ததென்று எந்த நெறியினை வகுக்கின்றார்களோ, அதுவே மெய்ந்நெறியாகும். சன்மார்க்க மன்றி மெய்ந்நெறி மற்றொன்றில்லை. சன்மார்க்கமே மார்க்கம் என்று நில்லாதவர்கள், சித்தயோகநெறியைப் பற்றி நின்று, பின்னே சன்மார்க்கம் சார்தலும் கூடும்.

Sahamarga leads to Sanmarga

சகமார்க்கம் சன்மார்க்கத்தில் உய்க்கும்

70. சன்மார்க் கந்தானே சகமார்க்க மானது
மன்மார்க்க மாமுத்தி சித்திக்குள் வைப்பதாம்
பின்மார்க்க மானது பேறாப் பிறந்திறந்து
உன்மார்க்க ஞானத்து உறுதியுமாமே.

Sahamarga blossometh into Sanmarga in the end,
Through Siddhi it leadeth to Supreme Mukti;
It is the Path lower involving myriad birth and [death
Eventually landeth in Gnana Finite.

சகமார்க்கம் முதிர்ச்சி பெற சன்மார்க்க நெறியிலேயே கொண்டு உய்க்கும்; சித்திகளைப் பெறச்செய்து சன்மார்க்க முடிவான மாமுத்தியை அளிக்கும்; சனமார்க்கத்துக்கு பிற்பட்ட இந்த சகமார்க்க நெறியில் நிற்போர் பல முறை பிறந்திறந்து, இறுதியில் உண்மையான ஞானத்தை அடைவர்.

குறிப்பு: *சகமார்க்கம் - யோகநெறி.*

Without Sahamarga they lose all

சகமார்க்கமில்லாதோர் யாவும் இழப்பர்

71. மருவும் துவாதச மார்க்க மில்லாதார்
குருவும் சிவனும் சமயமும கூடார்;
வெருவும் திருமகள்; வீட்டில்லையாகும்;
உருவும் கிளையும் ஒருங்கிழப் பாரே.

They that follow not the twelve-tiered path of Sahamarga,
Neither will they know Guru nor God, nor Faith [True;
The Goddess of Grace shall frown at them;
Salvation shall never their portion be;
And they do forfeit both—
The Form Divine and attributes thereof.

துவாதச நெறியாம் சகமார்க்க நெறி நில்லாதார் உண்மைச் சமய நெறியைக் கூடார்; ஞானநெறிக்கு வேண்டும் சிவகுரு தரிசனம் கிட்டப்பெறுர்; சிவத்தோடு ஒன்றும் நிலையையும் பெறுர்; சத்தியின் திருவருளையும் பெறுர்; முத்தியும் பெறுர்; இறைஉருவமும் கிட்டப்பெறுர்; அதன் தெய்வநலன்களையும் ஒருங்கு இழப்பார்.

குறிப்பு :

வரி 1. *துவாதச மார்க்கம்-பன்னிரண்டு நிலைகள் வழி குண்டலினிச் சத்தியைச் செலுத்தி இறையின்பம் பெறும் யோகநெறி.*

பன்னிரண்டு நிலைகள்; மூலாதாரம், சுவாதிட்டானம், மணி பூரகம், விசுத்தி, அனாகதம், ஆஞ்ஞை என்னும் ஆறு ஆதாரங்களும், சூரியன், சந்திரன், அக்னி என்னும் மூன்று மண்டலங்களும், சமனம், உன்மனை அதீதம் என்னும் மூன்று நிலைக் காட்சிகளுமாம். இதனை ஆதாரயோகம் என்பர் இதனுற பெறுவது துவாதச கலாப்பிரசாதம் எனப்படும்.

வரி 3. *திருமகள் - அருட்சத்தி.*

வரி 4. *யோகிகட்கு இறைவன் சகள உருவத்தினனுய்க் காட்சி அளிக்கின்றுன். அவ்யோகிகளும் சாரூபமடைகின்றனர். ...... ''அரும் பெறல யோகப்பெருந துறைப் படியுநாககு, இருநதோரிலக்க மினறெனிற் பொருந்தாது. ஆதலின நாதவிநது ஆகிய யோகவாணர்க்கு, உறுபயன் புரப்ப னினறனன'' எனனும் ஞானமிர்தத் தொடர் ஈண்டு நோக்கவும். ஞானமிர்தம். பக். 426 - 427 (காசிமடப் பதிப்பு).*

The Fruits of Yoga Samadhi

யோகச்சமாதியின் பயன்கள்

72. யோகச் சமாதியின் உள்ளே அகலிடம்;
யோகச் சமாதியின் உள்ளே உளர்ஒளி;
யோகச் சமாதியின் உள்ளே உளசக்தி;
யோகச் சமாதி உகந்தவர் சித்தரே.

In Yoga Samadhi is the Space Infinite;
In Yoga Samadhi is the Light Abiding;
In Yoga Samadhi is Sakti Omnipotent;
They that joy in Yoga Samadhi are verily the Siddhas great.

யோகச் சமாதியில் அமர்கின்றவர்கள் தம்முள்ளேயே அண்டவெளி அத்தனையையும் காண்கின்றார்கள்; இறைவனின் பேரொளியைக் காண்கின்றார்கள்; எங்கும் நிறைந்த அருட் சத்தியைத் தரிசிக்கின்றார்கள். அவர்களே சித்தரெனப்படுவோர் ஆவார்.

Yoga confers the blessings of Here and Hereafter..

யோகநெறி இம்மை மறுமை இருபயன்களையும் கொடுக்கின்றது.

73. யோகமும் போகமும் யோகியர்க்கு ஆகுமால்
யோகம் சிவரூபம் உற்றிடும்; உள்ளத்தோர்
போகம் புவியிற புருடார்த்த சித்தியது
ஆகும்; இரண்டும் அழியாத யோகிக்கே.

Both yoga and bhoga, the yogis may have
Through yoga is attained Siva's form divine;
Through bhoga within are all earthly blessings achieved;
Thus may he enjoy both - he, the Yogi immortal.

யோகியர்க்கு யோகம் போகம் என்னும் இரண்டும் உரியன வாகும். யோகத்தால் சிவரூபம் பெறுவர்; உள்ளத்தே போகத் தால் உலக இன்பங்களெல்லாம் பெறுவர். மரணத்தை வென்ற யோகி இம்மை மறுமை ஆகிய இருபயனையும் ஒருங்கே பெறு கின்றான்.

(தொடரும்)

பித்தன்

திரு. G. விநாயகம் அவர்கள் M. A.,
விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

உலகுக் கொருவனுய், வியன் மண்டலத்து ஈசனுய் விளங்கும் சிவபெருமான் நோக்கரிய திருமேனியுடையவன். அவன் திரு உரு எது என்பதைக் கூறஇயலாது. பெண்ணுமாய் ஆணுமாய், தாயும் தந்தையுமாய், முதலும் முடிவும் இல்லாத ஒரு பேரொளி. அவன் திரு உரு காணுதற்கு அரியது. "மூவரும் அறிகிலர்யாவர் மற்றறிவார்?" என்ற விஞ எழுப்புகின்ருர் மணிவாசகர். ஆயினும், கண்ணுயுலகெலாங்காக்கும் அவ்விறைவன் நம் பொருட்டுப் பல உருவங்கள் தாங்கி வருகிருன். இவ்வாறு உருவமாயும் அருவமாயும் அருஉருவமாயும், இறைவன் இருக்கின்ருன் என்பது இந்து மதத்தின் ஓர் சிறந்த அம்சம்.

உருவத்தோடு காட்சி அளிக்கும் இறைவனை நாம் பல வகையில் கண்டு ஆனந்தப் பெருங்கடல் மூழ்குகிரேும், பிறவியை அறுத்து அவன் திருவடியை அடைய முயல்கின்ரேம். அவ்வாறு இறைவன் பால் அன்பு செலுத்திஞல் நாம் அடையும் பயன் பல உண்டு. சுந்தரர், திருவாரூர்ப் பதிகத்தில்,

"பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமுந் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என்பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணு
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும்வயற் பழனத்தணி
ஆருரானை மறக்கலுமாமே."

என்று கூறுகிறார். உலகோர்க்கு எல்லாவகைச் சிறப்புக்களையும் தரும் சிவபெருமான் திரு உரு பித்தனைப்போல் காட்சி அளிக்கிறது. அவனைப் பித்தன் என்று கூறுவதில் அவனுக்கு ஓர் ஆனந்தம். ஆகவே, சுந்தரர்க்குத் தானே "பித்தன்" என்று அடி எடுத்துக் கொடுக்கிறார். பொன்னும், பொருளும் வழங்கும் அவன் உடுக்கும் உடை புலித்தோல், அணியும் மாலை மண்டையோடுகளும், பாம்பும். இருப்பிடம் சுடுகாடு. என்னே! அவன் கோலம்.

"பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்"

"கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ."

இவ்வகையில் திருக்கோலம் கொண்டதோடு நிற்காமல், தலையில் ஒரு பெண்ணையும், இடதுபாகத்தில் ஒரு பெண்ணையும் வைத்து நிற்கின்றான். இவன் ஓர் பெரும் பித்தன் போலும், என்று மணிவாசகர் கூறுகிறார்.

"தென்பாலு கந்தாடுந் தில்லைச் சிற்றம்பலவன்
பெண் பாலுகந்தான் பெரும்பித்தன் காணேடீ!"

பித்தன் என்று தன்னைக் கூறவேண்டும் என்று இவ்வகைக் கோலம் கொண்டானோ?

மெய் அடியார்க்கு வேண்டத் தக்கதை அளிக்கும் அவன் பால் உள்ள செல்வம் அரவங்களும், எலும்புகளும். இது என்ன விந்தை! மக்களுக்கு வேண்டியதை வழங்கும் ஒருவன் குபேரனாக அல்லவா இருக்க வேண்டும். ஆனால் இவன் பித்தனாகக் காட்சியளிக்கிறான். எவ்வுயிர்க்கும் தந்தையும், தாயுமாய் விளங்கும் அவன் ஓர் சிறந்த தாய் தன் மக்களைப் பல வகையில் இன்புற்றிருக்கத் தன் சுகங்களைக் குறைத்துக் கொண்டு அவர்களை வாழ்விப்பது போல், இவன் இக்கோலம் கொண்டானோ? ஆம், அது தான் உண்மை. அடியவர்கள் வீடுபேறு அடைய வேண்டி இக்கோலம் கொண்டு உள்ளான்.

"பித்தரை ஒத்தொரு பெற்றியர் நற்றவை எனப்பெற்ற
முற்றவை தம்மனை தந்தைக்குந் தவ்வைக்குந் தம்பிரானார்

செத்தவர் தந்தலையிற்பலி கொள்வதே செல்வமாகில்
அத்தவம் ஆவதறிந்தோமேல் நாமிவர்க் காட்படோமே"

என்பது சுந்தரர் கூற்று. "பெரும்பித்தன்" என்று கூறிய மாணிக்கவாசக சுவாமிகள் அவன் பித்தனாக இருப்பது நம்மை உய்விக்கும் பொருட்டு என்று கூறுகிறார்.

"பித்த னென்றனை உலகவர் பகர்வதோர்
காரணமிது; கேளீர்:
ஒத்துச் சென்றுதன் திருவருட் கூடிடும்
உபாயம தறியாமே
செத்துப் போய்அரு நரகிடை வீழ்வதற்
கொருப்படுகின்றேனை
அத்தன் ஆண்டுதன் அடியிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே!"

என்னே! அவன் திருவிளையாடல். நினைந்து உருகும் அடியவரை நைய வைத்து அவர்தம் வினைகளை நீக்கித் தன்பால் ஆட்கொள்கிறான். அவர் பொருட்டு அவன் செய்த செயல்களும் கொண்ட கோலங்களையும், நினைக்க உடல் சிலிர்க்கின்றது. கருணை வெள்ளமாகிய சிவபெருமான் தான் -த்தனாக இருத்தலோடன்றி, தன் அடியவரையும் பித்தனாக ஆக்குகின்றான். அவனிடம் உண்மையான அன்பு செலுத்தும் அடியவர்களின் நிலை தமக்கு வரவில்லை என்று கூறும் முகத்தான் பேரடியாராகிய மாணிக்கவாசகர் அடியவரின் நிலையைக் கூறுகின்றார்.

"ஆடுகின்றிலை; கூத்துடை யான்கழற்
கன்பிலை; என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை;
பணிகிலை; பாதமலர்
சூடுகின்றிலை; சூட்டுகின்றது மிலை
துணையிலி பிண நெஞ்சே!
தேடுகின்றிலை; தெருவு தோறலறிலை
செய்வதொன்றறி யேனே."

உலகோர் பிறவிக்கடலை நீந்திப் பேரின்பத்தை அடையும் பொருட்டுப் பித்தன் கோலம் பூண்டு, காட்சி அளிக்கும் சிவ பெருமான் பால் இடையறாது அன்பு செலுத்துவதே சிறந்த வாழ்வு. அதுவன்றி மற்றது சிறந்த வாழ்க்கையாகாது.

"பித்தனைப் பெருங் காடரங் காவுடை
முத்தனை முளை வெண்மதி சூடியைச்
சித்தனைச் செம்பொன் அம்பலத்துள் நின்ற
அத்தனை அடியேன் மறந்துய்வனே." —அப்பர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

[ஏழாம் திருமுறை]

★ புதிய பதிப்பு ★

(விசுவாவசு ஆண்டு வைகாசிப் பூச வெளியீடு)

350 பக்கம் வெள்ளைததாள், சுந்தரமூர்ததி சுவாமிகள் வரலாறு, அவரைப்பற்றிய கல்லெழுத்துக குறிப்புக்கள் ஆகியவை, அடங்கியது. தனிபபிரதி அடக்க விலை ரூ. 1-30.

ஒரே சமயததில 20 பிரதிகளுககுமேல் வாங்குவோர்க்கு 20% கழிவு
(தபால செலவு வேறு)

கிடைக்கும் இடங்கள்:-

1. T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,
கிரநகரத தலைவர், குமரகுருபரன் சஙகம்,
ஸ்ரீவைகுண்டம்.
(திருநெலவேலி மாவட்டம்.)

2. திரு. க. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், B. A.,
தியாகராச விலாசம், 53, பிள்ளையார் கோவில் தெரு,
திருவேட்டீசுவரன பேட்டை,
திருவலலிக்கேணி, சென்னை - 5.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

திருச்சதகம் — ஆறும் கொத்து

இனி ஆறும் கொத்து தோத்திரமே அநுபவம் என்றுணர்த்தும் சிவசத்திப் பொருள். மகவைத் தாய் இரட்சிப்பது போல நாதன் பாதுகாக்க வேண்டும் என்ற திருவருள் விநியோகமாவன:

தன்மை பிறரா லறியாத தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை யாண்டையா புறமே போக விடுவாயோ
என்னை நோக்கு வார்யாரே யென்னுன் செய்கே னெம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி யெந்தா யெங்குப் புகுவேனே.

(இ-ள்). தேவரீர் பெருமை, வேறான யாவர்கட்கும் அறிவொண்ணாத முதற்பொருளே! விண்ணப்பம். அடியேன் நாயினுங்கொடிய பாவி! [அத்தகைய] புல்லறிவனைக் கருணையால் மகா கேவலத் தினின்றெடுத்து அடிமைப் படுத்தத் திருவுளங் கொண்ட சுவாமி! சகல தசையில் பராமுகமானால், அடியேன் புறம்போனால், விட்டு விடுவது கருணையோ? என்னை இரட்சிப்பதற்கு வேறு கடவுளுளரோ? அடியே னென் செய்வேன்? என் ஆன்ம ரட்சகரே! பொன்போலொளிருந் திருமேனி யழகரே! என் தாயே! மகவானது வேறிடந் தெரிந்து போமே? எனவே இரட்சிக்கக் கடன் பெற்றவட்கே யாகையால், அடியேனையும் இரட்சிக்க வேண்டும் என இரந்து உண்மை யருளியது எனக் காண்க.

---

* *இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை-திருவான்மியூர். மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத தாரின் அனுமதி பெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும். 20% கழிவு உண்டு.*

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி*

தொகுத்தவர், திரு. P. P. துரைசாமி அவர்கள்,
கோயமுத்தூர்.

[மலர் 16, இதழ் 5-ன் தொடர்ச்சி]

உள்ள நயனஞ்சீவ — ஞெத்திருக்கச் செய்வித்தாற்
கள்ளமெலாந் தீருங் — கருணையுள்ள சற்குருவே. 231

பொன்புவிபெண் போற்றுகின்ற — புல்லர்கள்பாற் போகாதுன்
அன்புடையார் கூட்டஞ்சேர்த் — தாண்டருள்வாய் சற்குருவே. 232

கெடுநினைவைப் போக்கியருட் — கேள்வியைக் கேட்பித்து
நடுநிலையி னிற்குநெறி — நாட்டியருள் சற்குருவே. 233

கல்லான நெஞ்சக் — கலப்புள் ளோர்தம் முறவை
யெல்லா மொழித்திருக்கு — மெண்ணமருள் சற்குருவே 234

புலைகொலையில்லார் கூட்டம் — பூவுலகி லோங்குந்
தலைநெறி சன்மார்க்கந் — தனையருளுஞ் சற்குருவே. 235

கனவினனவி லுன்னைக் — காணக்கண் தந்தே
யுனதன்ப ரோடுமகிழ்ந் — தொன்றச்செய் சற்குருவே 236

எத்தனைபேர் நோய்நொடியி — லேகவருள் செய்துமிந்த
மததனையே மாறறிடுதல் — மாண்பாமோ சற்குருவே. 237

உன்னையொப் பாரெந்த — வுலகினிலு மில்லைமேலோ
ரென்னையொப் பார்பாவிகளி — லில்லையென்றன் சற்குருவே. 238

உள்ளதனை யுள்ளபடி — யுன்றன் மாசந்நிதியிற்
கள்ளமின்றிச் சொல்லிக் — கலங்குகின்றேன் சற்குருவே. 239

கலங்கா வகையகத்தின் — கண்கொண்டு காணு
நலங்காட்டு நாளென்றோ — நன்கருள்வாய் சற்குருவே. 240

(தொடரும்)

*திரு. ச. மு. கந்தசாமி பிள்ளையவர்கள் இயற்றியது.

கவிஞரும் கடவுளும்

திரு. கா. சுப்பிரமணியன் அவர்கள், B A.,

புலவர்கள் படைப்புத் தொழிலில் ஈடுபடுபவர்கள். உள்ளத்தில் பொங்குமாங் கடல் போல் உணர்ச்சி பொங்கித் ததும்பும் பொழுது, அவர்கள், தங்கள் உணர்ச்சிக்கு வடிவம் கொடுத்து அதனை வெளிப்படுத்துகிறார்கள். உள்ளத்தில் உணர்ச்சியின் உறுத்தலானது வேகமாய்த் தைக்கத் தைக்க, கவிதையில் நயமும் ஆழமும் சிறப்பாகப் புலப்படும் உள்ளத்தில் கவிந்த உணர்ச்சியை, அள்ளித் தருவதே கவிதை.

உலகில் ஆக்க வேலைக்கு என்றும் மதிப்பு உண்டு. சிருட்டியில் ஈடுபடும் உள்ளம், தன் செயலில் இரண்டறக்கலந்து ஒன்றி விடுகிறது. இவ்வுணர்வு அமைதிச் சூழலில் பிரவாகம் எடுக்கிறது. அதன் விளைவாக அரும்பெரும் படைப்புக்கள் அவதரிக்கின்றன.

கவிஞர் ஒருவர் தம் ஆற்றலின் தன்மையை எண்ணிப் பார்க்கிறார். தம் படைப்பாற்றல் அவருக்குத் தெம்பை ஊட்டுகிறது. தம் படைப்பாற்றலைச் சர்வ வல்லமை உள்ளதாக அவர் கருதுகிறார். படைப்பாற்றலில் தனக்கு நிகரானவர் உளரோ என எடைபோடத் தொடங்குகிறார். நிலவுலக நிகழ்ச்சிகள் அனைத்தும் அவர் நினைவில் பளிச்சிட்டு மறைகின்றன. அவர் முகத்தில் ஏதோ மகிழ்ச்சி துளிர்க்கிறது. அவர் சிந்தனையில் சிக்கிச் சென்ற படைப்பாற்றல் அனைத்தும், அவரது படைப்பாற்றலின் முன் தரங்குறைந்து தென்படுவதே காரணமாக இருக்கலாம்!

திடீரென அவர் உள்ளத்தில் தலை நீட்டும் எண்ணம் அவருக்குச் சஞ்சலத்தைத் தந்தது போலும்! முகம் கலவரம் அடைகிறது. இப்பொழுது முகத்தில் ஆழ்ந்த சிந்தனையின்

தேக்கம் வெளிப்படுகிறது. இதோ அவர் முகத்தில் எல்லை யில்லாப் புன்னகை மலர்ந்து மகிழ்வைத் தேக்கிக் கொள்கிறது.

கவிஞரின் மன மாறுதல்களைப் படம் பிடித்துக் காட்டியது அவர் முகம். அவர் உள்ளத்தில் உலவிய கருத்துக்கள் எவை? அவர் முக மண்டலம் காட்டிய மாறுதல்களுக்குக் காரணம் என்ன?

படைப்பாற்றலை எடை போடத் துவங்கிய கவிஞன் உள் ளத்தில் படைப்புக் கடவுளை பற்றிய நினைவே வாட்டத்தைத் தந்திருக்கிறது. 'படைப்புக் கடவுளோடு தன்னை ஒப்பிடுவதா?' இவ்வுணர்வில் பிறந்த கலவரம் முகத்தில் வாட்டத்தை ஏற்படுத்தி யிருக்கிறது.

கணப் பொழுதில் தன் எண்ணம் பற்றிய பரிசீலனையில் இறங்கினர். அப்பொழுது முகத்தில் சிந்தனை ரேகைகள் விரிந்து படர்ந்தன. ஆழ்ந்த சிந்தனையின் பின், படைப்பாற்றலில் படைப்புக் கடவுளே தனக்குக் கீழ்ப்பட்டவர்தான் என்னும் உணர்வு அவரை ஆனந்த சாகரத்தில் ஆழ்த்தி விட்டது. அதன் விளைவே அவர் முகத்தில் மகிழ்ச்சியின் சாயல் தேங்கத் துவங்கியது.

கவிஞர் படைப்புக் கடவுளைவிட எவ்வகையில் சிறந்தவர்? இருவரும் படைப்பினை மேற்கொண்டவர்கள். கலைமகள்படைப்புக் கடவுளின நாவில் குடியேறியிருக்கிருள். அக்கலைமகள் புலவா நாவிலும் வீற்றிருக்கிருள். இவ்விரு ஒற்றுமை தவிர வேற்று மையுங் காணலாம்.

படைப்புக் கடவுள் பிரம்மா. அவரோ கடவுள்! அலகில்லா வல்லமையின் இருப்பிடம். கவிஞரோ சில் நாள் பல்பிணி யாக் கையும், சிற்றுயிரும் பெற்றவர். ஆறறிவு படைத்த அற்ப மனிதர்! கடவுளுக்கும் கவிஞருக்கும் உள்ள வேற்றுமை மலைக் கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு போன்றதாகும்.

நான்முகனே, உலகில் ஓரறிவு முதல் ஆறறிவு ஈருக உள்ள உயிர்கள் அனைத்தையும் படைக்கின்றுன். கவிஞரோ கவிதை களைப் படைக்கின்றுர். கவிஞரைப் படைத்தவனே அக்கடவுள் தான்!

ஆனாலும் கடவுளின் கைநாடியைப் பிடித்துப் பார்ப்பது போல, கவிஞர், கடவுளின் படைப்பாற்றலை அளந்து பார்க்கிறார். தன் படைப்பாற்றலே சிறப்பு வாய்ந்தது என்ற முடிவிற்கு வருகிறார். கவிஞரின் கூற்று மெய்தானா? உண்மையறிய இவ் விருவரின் படைப்புக்களையும் ஒப்பு நோக்க வேண்டும். அப் பொழுதுதான் எது சிறந்தது எனக் காணமுடியும்.

அயன் படைப்பது உயிரினங்கள் வாழும் உடல்கள். ஆன்ற புலவர் படைப்பது கவிதைகள். அயன் படைக்கின்றவற்றின் வாழ்க்கையோ கால வரையறைக்கு உட்பட்டதாகும். மிஞ்சிப் போனால் அயன் படைத்த சீவராசிகளுள் ஒன்றாகிய மனிதன் சுமார் நூற்றைம்பது ஆண்டுகள் வாழமுடியும். கடவுள் படைப் புக்கள் நிலையாமையில் உழல்பவை. கடவுள் படைப்பில் நாம் காணும் விநோதம் இது!

கவிஞன் படைப்பு எத்தகையது? அதன் வாழ்க்கை கால வரையறைக்குக் கட்டுப்படாதது. அது சாகாவரம் பெற்று விளங்குகிறது! கால வரையறையைக் கணக்கிட்டாலுங் கூட, கவிஞன் கடவுளை வென்றுவிடுகிறான்.

நூற்றைம்பது ஆண்டுகள் வாழும் படைப்புக்களைப் படைத்த பிரமன் சிறந்தவனா? பன்னூறு ஆண்டுகளானாலும் பாழாகாக் கவிதைகளைப் படைப்பவன் சிறந்தவனா?

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வரையப்பட்ட குறளின் செல்வாக்கு இன்னும் குன்றவில்லை; மாறாகக் குன்றிலிட்ட தீபம்போல் அனைத்துலகும் தன் ஒளிபரப்பி, தமிழகத்தைத் தலை நிமிர்ந்தல்லவா நிற்கச் செய்கிறது! 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட தமிழ்நாடு' என்னும் பாரதி வாசகம் பலித்து விட்டதல்லவா? பல மொழியினரும் அதனைத் தத்தம் மொழிகளில் மொழி பெயர்த்து மகிழவில்லையா? தன்னேரில்லாத் தமிழ்' என்னும் சிறப்பினை உண்டாக்கியவர் யார்? கவிஞரே அல்லரா? ஆகவே கவிஞர் நான்முகனை விடச் சிறந்தவர் என்று அடித்துக் கூறத் தயக்கமும் வேண்டுமோ?

இவ்வுண்மை தரும் இன்பம், கவிஞருக்குக் கசக்கவா செய் யும்? அவர் உள்ளம் துள்ளிக் களிமகிழ்வு கொண்டாடுகிறது.

ஆனந்தம் அலைபோல் உள்ளத்தில் கிளம்பி மோதுகிறது. உணர்ச்சி கடல்போல் கொந்தளிக்கிறது. மன உறுத்தலானது, 'முன்னிக் கவிதை வெறி'யாகி வெடிக்கிறது. கவிதை ஒன்று பிறக்கிறது!

"கலைமகள் வாழ்க்கை முகத்த(து) எனினும்
மலரவன் வண்டமிழோர்க்(கு) ஒவ்வான் — மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு."

மலரவனாகிய பிரம்மா, தமிழ்ப் புலவர் ஆகியோர் இருவர் நாவிலும் கலைமகள் வாழ்கின்றாள். ஆனாலும் பிரம்மா தமிழ்ப் புலவருக்கு ஒப்பாக மாட்டார்! காரணம் பிரம்மா ஆக்கும் உடம்பு விரைவில் அழியும் தன்மையது. ஆனால் புலவர் படைக்கும் உடம்போ என்றும் நின்று நிலைப்பதாகும். மேலும் புலவர் படைப்பு, குன்றாப் புகழுடன் விளங்குவதாகும்.

அழகிய இப்பாடலை ஆக்கி அருளிய ஆன்றோர் யார்? தவஞானச் செல்வரும், சிவஞான யோகியுமான தவப்பெருந் திரு குமரகுருபர சுவாமிகளே யாவார்! 'நீதிநெறி' விளக்கத்தில் இப்பாடல் நன்முத்தென ஒளிர்கிறது.

கவிஞருக்குரிய வேகமும், ஆற்றலும் கவிதையாக மலர்ந்து, கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் ஆற்றலை இப்பாடலுக்கு நல்கிவிட்டதல்லவா?

பதினேழாம் நூற்றாண்டில் பாடப்பட்டது இப்பாடல். என்றும் பாராட்டுப் பெறும்படியாகக் கவிஞர், தம் பாடலுக்குச் சாகாவரம் அளித்தார். ஆனால் பிரம்மாவோ, தான் படைத்த அக் கவிஞரின் பொன்னுடலுக்கு சாகாவரம் கொடுக்க முடியவில்லை. கவிஞரே கடவுளை விடச் சிறந்தவர் என்பது இதனால் புலனாகவில்லையா?

நிலையாமை, நிலைபேற்றைத் தரும் விந்தையை மனித குலந் தான் சாதிக்க முடியும் போலும்!

கல்லும் கனியும்

திரு. எஸ். சோமசுந்தரம் அவர்கள்,
கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம்,
மதுரை

இம்மையில் வேண்டும் வாழ்வு நலங்களையும், மறுமையில் வேண்டும் முத்தி நலங்களையும், ஒருங்கே, தரவல்ல பரம்பொருள் சிவபெருமானே எனத்துணிவது சைவசமயம். பதி,பசு, பாசம் என முப்பொருள்களின் உண்மைகூறும். பாசத்திலிருந்து நீங்கிய போது பசு (உயிர்), பதியை (இறைவனை) அடைந்து நிலைத்த பேரின்பம் அடையுமென்று இச்சமயம் நிலைநாட்டும். ஆணவம், கன்மம், மாயை என்ற பாசத்தளைகளால் கட்டுண்டுள்ள ஆன்மாவை, இறைவன் குருவடிவாக எழுந்தருளி, உபதேசம் நல்கி, ஞானம் பெறச்செய்து, பக்குவமுற்றபோது தன் பாத தாமரைகளில் சேர்ப்பான். இவ்வாறு பாசத்தால் கட்டுண்டபோது மனிதன் (உயிா), இவ்வுலக வாழ்வில் மயங்கி நிற்கின்றான். அவன் மனம் கல்லாகவுள்ளது. அதனைக் கனிவிக்கின்றான் அருட்கனியாக விளங்கும் இறைவன். சைவ சமய அடியார்கள் தங்கள் மனத்தைக் கல்லாக உருவாக்கி அவற்றினுடைய கடினத் தன்மையைப் போக்க வேண்டுமென்று இறைவனிடம் வேண்டியுள்ளனர். இறைவன் ஞானப்பழமாக விளங்குகின்றான். அவன் அருள் பெறவிரும்பும் ஆன்மாக்களின் மனமோ பாறையாக விளங்குகின்றது. பாறையைப் பக்குவப்படுத்தி அதிலே இனிமையான பழச்சுவையைக் கூட்ட வேண்டுமென்றால் எத்தகைய வல்லமை வேண்டும்? அவ்வல்லமை யுடையவன் இறைவன் ஒருவனேயாகும். ஆகவேதான், அவனருளாலே அவன் தாள் வணங்க வேண்டும் எனக் கூறியுள்ளார் மாணிக்கவாசகப் பெருந்தகை.

மேற்கண்ட கட்டுரை, மதுரை சிதசபை விழா மலர் ஆசிரியர் அனுமதி பெற்று வெளியிடப்பெறுகிறது.

மணிவாசகர் பிறவிகளின் முறைவைப்பை விளக்கும் பொழுது, கல்லின் கடினத தன்மையை மனிதன் பெற்றுள் ளமையின் காரணமாக "கல்லாய், மனிதராய்" என்று கல்லுக் கடுத்தபடியாக மனிதனை வைத்துள்ளார்.

பழத்தோட்டம் பாறையிலே அமைய முடியாது. ஆனால் மனிதன் மனப்பாறையிலே, இறைவனாகிய பழத்தோட்டத்தை அமைத்து அதில் சித்தியாகிய அருட்பழம் கனிந்து, தேன்சிந்தி, பேரின்பம் விளைவிக்க வேண்டுமென்று அடியார்கள் முயற்சித் தார்கள். முடிவிலே, பலனும் கண்டார்கள். மனமாகிய கல்லைப் பிசைந்து கனியாக்கவல்லவன் இறைவன். கனிந்த உள்ளத்தைக் கருணை வெள்ளத்தில் ஆழ்தகி ஆராயினபம் தருவானும் அவனே.

" கல்லைப்பிசைந்து கனியாக்கித்தன் கருணை வெள்ளத்து
அழுத்தி வினைகடிந்த வேதியன் "

என்று மாணிக்கவாசகர் அருளியுள்ளார்.

நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருக முருகனின் செஞ் சொற்புனை மாலை பாடவேண்டுமென்று அருணகிரியார் திருவாய் மலர்ந்துள்ளார். இதனினும் மேலாக, தடாகத்தில் மலரவேண்டிய தாமரை, வலிய பாறையிலே மலர்ந்து மணம் கமழ வேண்டு மென்று கூறுகின்றார். தாமரையென்று அவர் கூறுவது முருகப் பெருமானுடைய திருவடிகளையே. பாரதம் பாடிய பெருந் தேவனாரும், தாமரை புரையும் காமர் சேவடி என்று சிறப்பிக் கின்றார். அததகைய அழகிய தாமரைத் திருவடிகள் மனமாகிய சிலையிலே மலர வேண்டும்.

" திணியான மனோசிலை மீதுனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ "

என்று முருகனை நே கி வினவுகி ரா. நிச்சயம் மலரும் என்ற நம்பிக்கையிலே பிறந்த அருள்வாக்கு இது.

கல்லுக்கும் மனிதனுக்கும் தொடர்பு. அதுபோல கல்லுக்கும் கடவுளுக்கும் தொடர்பு உணடு. ஏன்? சிவ குடும்பம் முழுவதற் குமே தொடர்பு. அதனால் அவன் கல்லைக் கனியாக்கலாம். அக்

கல்லிலே, திருவடியாகிய தாமரையை மலரச்செய்யலாம். இவ்வாறு அழகுறத் தொடர்பு காட்டி விளக்குகிருர், பிற்கால புலவரொருவர்.

சிவபெருமானின் மனைவி, பார்வதிதேவி. அவள் அவதரித்த இடமே இமயமாகிய பெருமலை. அவளுடைய மூத்த பிள்ளையாகிய விநாயகர் வேத வியாசர் கூறக் கூற மேருமலையில் பாரதம் வரைந்தார். இளைய பிள்ளையாகிய முருகப்பெருமானே குன்றுதோறும் விளையாடி அருள்புரியும் குமரனக விளங்குகின்ருன். சிவபெருமானே உறைவிடமாகக் கொண்டிருப்பதும் கைலாய மலையே. கையில் வில்லாக வளைத்திருப்பதோ மேருமலை. இப்படிப் பலவகையில் கல்லோடு தொடர்புடைய குடும்பத் தலைவனகிய இறைவன் குற்றம் பொருந்திய மனக்கல்லைக் குழைவித்து ஏன் அருள் செய்யக்கூடாது? என்று கேட்கிருர் அவர்.

“கல்லேனும்ஒரு காலத்து உருகும்
என கல்நெஞ்சம் உருகவில்லையே”

என்றும் “கருணைக்கிணங்காத வன்மையையும் கற்பிக்க நான் முகன் ஒரு கடவுளோ? வல்லான் வகுத்ததே வாய்க்கால் என னும் பெரும் வழக்குக்கு இழுக்குமுண்டோ?” என்றும் வினவுகின்ருர் தாயுமானுர்.

நம்முடைய மனம் கல்லாக விளங்குகிறது. அதனைக் கனியாக்க வல்லான் இறைவன். அவனுடைய திருவடிகளில் இடையருத மெய்யுணர்வோடு பக்தி செலுத்தின் நிச்சயம் கல்லும் கனியாகும். பாறையிலே பாத தாமரையும் மலரும்.

நம்மனம் கனியாக, அக்கனி தரும் பேரின்பச்சுவையாக விளங்க, ஒல்லும் வகையால் ஓவாதே இறைவனின் திருவடிகளிலே மெய்யன்பு செலுத்த வேண்டும். அதனுல் நல்லன எல்லாம் நாம் பெறுவோம். என்றும் இன்பமே அன்றித் துன்பமில்லை. இதனையே பொய்யில் புலவர் வள்ளுவரும்,

“வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல”

என உறுதிமொழி கூறுகின்ருர்.

கனிக கல்மனம்! பெருக பேரின்பச் சுவை!

அப்பர்

(சொக்கலிங்கப் பெருமான் பாடல்)

நறுமலர் நீருங் கொண்டு நாடொறும் ஏத்தி வாழ்த்திச்
செறிவன சித்தம் வைத்துத் திருவடி சேரும் வண்ணம்
மறிகடல் வண்ணன பாகா மாமறை யங்க மாறும்
அறிவனே ஆலவாயில் அப்பனே அருள்செயாயே.

சொக்கலிங்கபபெருமான — அஙகயற்கண்ணி (மீனுட்சியம்மை).

நம்மாழ்வார்

(திருவாய்மொழி 10, 4, 6)

நாகத்தணையானை நாள்தோறும் ஞானத்தால்
ஆகத்தணைப் பார்க்கு அருள்செய்யும் அம்மானை
மாகத் திளமதியம் சேரும் சடையானைப்
பாகத்து வைத்தான்தன் பாதம் பணிந்தேனே.

★ திருவிசைப்பா ★

திருப்பல்லாண்டு

[ஒன்பதாம் திருமுறை]

★ தெளிவுரை ★

புதிய பதிப்பு

(குரோதி ஆணடு மாாகழித திருவாதிரை வெளியீடு)

376 பக்கம் வெள்ளைத தாள். தனிப பிரதி அடக்க விலை ரூ. 1-50

ஒரேசமயத்தில் 20 பிரதிகளுக்கு மேல் வாஙகுவோருக்கு 20% கழிவு.

(தபால செலவு வேறு)

கிடைக்குமிடங்கள் :-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைகோயில்,
   ஸ்ரீவைகுண்டம். *(திருநெல்வேலி ஜில்லா)*
2. "தியாகராச விலாசம"
   53, பிளளையாா கோயில தெரு, திருவேட்டீசுவரன்பேட்டை,
   திருவல்லிக்கேணி, சென்னை—5

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்
அற்புதத் திருப்பதிகங்கள்
Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி

Then St. Sundarar continued his trip northwards and visited the shrines at Kanchi, Tiruppanangattur, Tiruvallam and Kalahasti. At Kalahasti he sang in praise of Tirupparuppadam (Sri Sailam), Tirukkedaram etc., He proceeded to Tiruvorriyur (near Madras).

Aninditai, one of the maids of Parvati, was born in the family of a peasant and was called Sangiliyar. She dedicated herself to the service of Lord Siva at Tiruvorriyur. She made garlands for the temple.

One day St. Sundaramurti entered the temple and saw Sangiliyar weaving flowers into a garland, and immediately fell in love with her. As he was wont to appeal to his Lord for fulfilling his desires, he prayed this time also.

Lord Siva appeared in the dream of Sangiliyar and made her consent to her marriage with Sundaramurti. She put a condition to this marriage that Sundarar should never separate from her. When this was conveyed to St. Sundarar he was in a fix. It was his habit to visit shrines at various places and this condition would confine him to Tiruvorriyur. So he suggested to his Master to stay under the sacred tree

when he made this promise to Sangiliyar at the time of marriage before the shrine. Lord Siva agreed to this.

But God had His own plans. So He went to Sañgiliyar and advised her to insist on the promise being made under the sacred tree, where Lord Siva would remain as asked by the saint. And the marriage took place.

The spring came and it brought the sweet memories of the festival at Tiruvarur. St. Sundarar could not stay any longer at Tiruvorriyur. So he left for Tiruvarur. The moment he crossed the limits of Tiruvorriyur he lost his sight He realised that it was because of breaking his promise to Sangiliyar in the presence of God. And so he appealed to his Redeemer to restore his eyesight.

திருவொற்றியூர்: பண். தக்கேசி

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் றுஞல்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்பன் ஆகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்று நானறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே.

"Oh, Lord of Tiruvorriyur, I took refuge in your feet with an imperfect body; I do not know whether I deserved it. People remove the dung and milk the goat. I utter only your name even when I slip. I know no other word. Be merciful and suggest me a remedy to my eyes."

(To be continued)

திருவண்டப் பகுதி

திரு. சா. ப. சபாரத்தினம், எம். ஏ., பி. எஸ். சி.,
பூ. சா. கோ. கலைக்கல்லூரி. கோவை-1.

அனைவரையும் அன்புருவாக்கும் இறைநூல் திருவாசகம். அஃது இன்பக் களிப்பின் தேக்கம்; இறையின்பங் கொழிக்கும் வைப்பு; இருப்பு நெஞ்சையும் நெகிழ்க்கும் செவ்வழற் பிழம்பு; கண்களைக் கலுழ்க்கும் காட்சிச் செறிவு; இருவினை வெம்மையால் இளைப்புண்டார் ஒதுங்கி இன்பந் துய்க்கும் தண்ணிழற்படிவு; இன்னும் பல; பல. இவ்வின்பப் பொய்கையில் தோய்பவரின் இன்ப நிலையை மொழிதலும் ஒல்லுமோ? அவர் நெகிழ்ச்சியே வடிவாவார். நினையுந்தோறும் நினையுந்தோறும் நம்மை இறைவனின் அருட்டிறத்தை எண்ணி உருகும் நெகிழ்ச்சி நிலைக்கு உய்க்கும் ஆற்றல் அப்பெருநூலுக்கு உளதுகாண்! "உறுபெயல் தண் துளிக் கேற்ற பலவுழு செஞ்செய் மண் போற் கலுழ்ந்து" என்னும் அகநானூற்றுச் செவ்வடிகள் ஈண்டு என்நினைவில் முகிழ்க்கின்றன. அங்ஙனம் கலுழச் செய்யும் அன்பு நூலின் ஒரு கூறுயப் பொலியும் திருவண்டப்பகுதியைக் குறித்து ஒரு சில கருத்துக்களை இன்னே கிளக்குவல்:

'திருவண்டப் பகுதி' நூற்று எண்பத்திரண்டு அடிகளான் நீண்டொழுகும் ஓர் இனிய அகவற்பா. அலர்ந்து அலர்ந்து அலைசெய்யும் இன்பப் பெருக்கின் சுழற்சியுட் சிக்குண்டு, மணிமொழி அடிகளார் இப்பாட்டினை அருளிச் செய்கின்றாராகலின் இப்பாவின் அடிகள் சில இடையிடை தெற்றுப்பட்டுச் செல்கின்றன. திருப்பெருந்துறை அனுபவம், தில்லையம்பதியிலே, 'திருவண்டப்பகுதியாக உருவெடுக்கின்றது. மூவா இன்ப அனுபவத்தின் முழுமையே இப்பாட்டின்கண் முழுக்க முழுக்க உணர்த்தப்படுகின்றது எனவே சமய உண்மைகளைக் காட்டிலும், இலக்கிய நறுஞ்சுவையே இதன்கண் விஞ்சி நிற்கின்றது. சமயக்

கண் கொண்டு இதைச் சுவைப்பதனுன் வரும் 'ஆனந்தத்தைக்' காட்டிலும், இலக்கியக் கண் கொண்டு இதைத் துய்ப்பதனுன் வரும் இன்பம் மிகப் பெரிது. பொதுவாகவே, சமயத் தமிழ் இலக்கியங்கட்கு, இலக்கிய நோக்கம் பெரிதும் வேண்டப் படுகின்றது. இதனுற்றுன் மேனுட்டுச் சமய நூல்களைப் போலல் லாமல் தமிழ்நாட்டுச் சமய நூல்கள் திறனுய்வுக்குட்பட்டு ஒளிர்கின்றன.

பாட்டின் உள்ளுறை:

இப்பாட்டின் உள்ளுறை பொருள் யாது? இப்பாட்டிஞற் புலனுவது. என்? என நாம் ஆழ்ந்து நோக்கல் வேண்டும். "சிவனது தூல சூக்குமத்தை வியந்தது" என இப்பாட்டின் முடியில் ஒரு குறிப்புண்மையை நோக்குக. எல்லாப் பொருள்களி னும் இறைகொண்டொளிரும் இறைவனின் பருமை நிலையையும் நுண்மை நிலையையும் இப்பாட்டு வியந்துணர்த்தி ஒளிர்கின்றது" என்பது இக்குறிப்பின் பொருள். செந்தாமரைக் காடனைய மேனியனின் அவ்விரண்டு நிலைகளும் பாட்டினுள் விண்டுரைக் கப்படுகின்றன என்பது செவ்விய உண்மை. மணிமொழிப் பெருமானுர் அவ்விரண்டு முரணிய நிலைகளையும் மாறிமாறி மிகச் செவ்விதாய் உணர்த்துகின்ருர். ஆயினும் ஆழ்ந்து நோக்கின், பாடல் உணர்த்துவது அம்முரண்நிலை அன்று என்பதும், அந்நிலையின் வேறுபட்ட மணிமொழிப் பெருமானின் பேரின்பநிலையே இப்பாட்டின் முழுச்சுவையில் தோய்வார்க்குப் புலனுகின்றது என்பதும் நன்கு தெரிய வரும். நோக்குவார் நோக்கும் பொருண்மைகளைத் தண்டாது வழங்கும் மொழி வண்மை சான்றது திருவாசகங்காண்!

> "ஆரணங்காணென்பர் அந்தணர்; யோகியர் ஆகமத்தின்
> காரணங்காணென்பர்; காமுகர் காமநன் னூலதென்பர்
> ஏரணங்காண் என்பர் எண்ணர்; எழுத்தென்பர் இன்புலவோர்
> சீரணங்காய சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே"

எனவரும் திறன்தெளி பாட்டு திருக்கோவையாருக்கு மட்டு மன்று; திருவாசகத்திற்கும் அஃதொக்கும். திருவாசகத்திற்குக் கொள்ளுங்கால், 'சிற்றம்பலக் கோவை' என்பதற்குச் சிற்றம்

பலத்தின் கண் அருளிச் செய்யப்பட்ட பாடல்களின் தொகுப்பு' எனப் பொருளுரைத்துக் கொள்க; காமுகர் கூற்றை விடுக்க. எனவே, 'திருவண்டப்பகுதியின்' உள்ளுறை பொருள், பேரின்பத் தழுந்தல் என்பதும், இதனுற்புலனுவது அடிகளாரின் மெய்யின்ப வடிவம் என்பதும் குறிக்கொளல் வேண்டும்.

இருநிலைத் தெளிவு :

திருவண்டப் பகுதியின் உள்ளுறை அஃதேயெனின், 'சிவனது தூலசூக்குமத்தை வியந்தது' என்னும் நுண்பொருட் குறிப்பு எற்றுக்கு என்னும் விஞ எழுகின்றது. திருவண்டப் பகுதியாம் திருவாசகச் செழுந்துண்டில் இருவகை விளக்கங்கள் இலங்குகின்றன. ஒன்று மணிமொழிப் பெருமானுர் உள்ளத் தெழுச்சியின் விளக்கம். மற்ருென்று இறைவனின் தூல சூக்கும விளக்கம். முன்னதன் விளக்கத்திற்கு ஏற்றங்கொடுக்கும் முறையில், பின்னதன் விளக்கம் ஒளிர்கின்றது. மாணிக்க வாசகரின் இன்பநிலையை மேன்மேலும் சிறப்புறுத்துவான் வேண்டி, இறைவன்றன் பருமை - நுண்மை விளக்கம் ஒளிர் கின்றது. இதனுனும், சமயக்கண் கொண்டு நோக்குவார்க்குச் சமயச் சார்பான உண்மையே தலைசான்றதாய்ப் படுதலானும், அறிஞர் மேற்காட்டிய நுண்பொருட் குறிப்பைக் குறித்துச் சென்றனர் என்க. எனினும் பாட்டின் உயிர்நிலை 'தூல சூக்கும' விளக்கம் அன்று. அடிகளாரால் அகநெகிழ்ந்துணர்த்தப்படும் இறைவனியல்புகளுள் தலையாயது என்று மட்டுமே அவ்விளக் கத்தைக் குறிப்பிடலாம். இனி அவ்விளக்கத்தைக் காண்போம்.

அடிகளார் இறைவனின் இரண்டு நிலைகளையும் உணர்த்தும் ஆறு பெரிதும் வியத்தற்குரியது. பாட்டின் தொடக்கக் காட்சியை நோக்குமின்! பெரிய பெரிய அண்டங்கள் நூற்ருெரு கோடியினும் மேற்பட்டனவாய்த் திரண்டு திரண்டு சுழன்று கொண்டிருக்கின்றன. அண்டங்கள் ஒரே அளவினவா? அல்ல. ஒன்றினும் ஒன்று பெரியது; அண்டங்களின் தன்மையோ அளத்தற்கரியது; தோற்றமோ வண்மையும் பெருமையும் சான்றது. பேரண்டங்களின் சுழற்சிக் காட்சி இஃது? ஆயினும் அடுத்து நோக்குமின்! மிகப்பெரிய அண்டங்கள்

இன்னே மிகச் சிறியனவாய்க் காட்சியளிக்கின்றன. மனையி னுள்ளே புகுந்து படியும் ஞாயிற்றின் கதிர்க்குழுவில் பொருந் தித்திரியும் எண்ணற்ற சிற்றணுக்களே போல் அவை சிறுத்துக் காண்கின்றன. காரணமென்? பேரண்டத் தோற்றத்தினும் பெரிய - சாலச் சாலப் பெரிய - முழுமுதற்றோற்றம் அங்கே ஒளிர்கின்றது. அதன் ஒளிர்ச்சிப் பெருக்கம் என்னே! என்னே! பெருமையைச் சிறுமையாக்கும் பெருமையின் பெருமைய ஈண்டு நாம் உன்னிப் பார்த்தல் வேண்டும்.

“ அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன்...........” (1-6)

எனவரும் அடிகளான் அண்டங்களின் சிறுமையையும், அழ கனின் கழிபெரும் பெருமையையும் நன்குணரலாம். ‘ஒரு பொருள் இத்துணை யளவு பெரிது’ எனக் கூறுவதில் கருத்துமட்டும் காணலாம்; கலைச் சுவைக்கு ஆங்கே இடனின்று. வேறொரு பொருளை அதன் பாங்கர் நிறுத்தி ‘அப்பொருளினும் இப்பொருள் பெரிது’ எனக் கூறுவதில் கருத்துடன் ஓரளவு கலைச்சுவையும் இருக்கின்றது. ஆனுல் ஒரு பொருளின் பருமை நிலையை விளக்கு தற்குப் பலப்பல பரிய பொருள்களைக் கண்முன் நிறுத்திப் பின் அப்பொருளின் தோற்றத்தால் பரிய பொருள்கள் சிறுத்துப் போமாறு செய்தல், ஒரு நுண்வினையே. பெருமையையே சிறுமை யாக்கி ஒன்றன் பெருமையை விளக்கும் கலைத்திறன் இஃது! பாடல் வல்லார்க்கு இவ்வினை மிக எளிதுகாண்! இந்நுண் வினை யோடு, ‘இன்னுழை கதிரின் துன்னணுப் புரைய’ என்னும் உவமையழகையும் ஒருங்கு கூட்டி, இறைவனின் தூலநிலைத் தோற்றத்தை மிக எளிதாகக் காட்டிவிடுகின்றுர், அடிகளார். இறைவனின் நுண்மையைக் கூறுமிடத்தும் மணிமொழியார் இத்திறனைக் காட்டுகின்றுர்.

" ....தெரியின்
வேதியன் தொகுதியொடு மாலவன் மிகுதியும்
தோற்றமுஞ் சிறப்பும் ஈற்ருெடு புணரிய
மாப்பேர் ஊழியும் நீக்கமும் நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்து
எறியது வளியின்
கொட்கப் பெயர்க்குங் குழகன்..........." (6 - 12)

என்னும் அடிகளில் நான்முகன் திருமால் முதலான கடவுளரை யும் அவர் புரியுந் தொழில்களையும் தன்னுட்படுத்துச் சுழற்றும் குழகனின் நுண்மை நிலை செவ்வனெளிர்தல் காண்க. நுண்ணுயிர்களையும் நுண்ணுயிர்களின் தொழில்களையும் அம் முதல்வன்பால் அடக்கி, அவன்றன் நுண்மையை விளக்கும் கலைத்திறன் இஃது. இவ்விளக்கத்திற்குச் 'சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்து எறியதுவளியின' என்னும் உவமை துணை நிற்கின்றது. பருமையும் நுண்மையும் வாய்ந்த சுழற்காற்று எல்லாவற்றையுஞ் சுழற்றும் முதல்வன் செயலுக்கும், அதன் கண் பட்ட சிறுகாற்று இறைவன் செயலிற்பட்டு நடைபெறும் ஏனை எல்லாவற்றிகும் உவமை என நுண்ணிதின் விளக்குவர் மறைமலையடிகளார். நுண்மையைப் பருமையாக்கும் நுண்மை யின் நுண்மையை ஈண்டுநாம் எண்ணிப்பார்த்தல் வேண்டும்.

இனித் தொடர்ந்துவரும் அடிகள் பலவற்றிலும் இறைவ னின் இவ்விரண்டு நிலைகளையும் விளக்கியவாறே செல்கின்ருர், மணிமொழிப் பெருமானுர்.

" அறுவகைச் சமயத்து அறுவகை யோர்க்கும்
வீடுபேருய் நின்ற விண்ணேர் பகுதி
கீடம் புரையுங் கிழவோன்..........." (17 - 19)

என்பதனுன் இறைவனின் பருமைநிலை நன்கு பெறப்படும்.

" அருக்கனிற் சோதி அமைத்தோன், திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன், திண்டிறல்
தீயின் வெம்மை செய்தோன், பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன், மேதகு

காலின் ஊக்கங் கண்டோன், நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன் என்றென்று
எனைப்பல கோடி எனைப்பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயின் அடைத்தோன்; அஃதான்று"(20-28)

என்னும் அடிகளில் இறைவனின் நுண்ணிய வரம்பிலாற்றல் உணர்த்தப்படுகின்றது.

"விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தருந் தன்மையில் ஐயோன் காண்க" (44-45)

எனவரும் அடிகளில் முறையே பருமைநிலையும், நுண்மை நிலையும்,

"நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க" (49-50)

எனவரும் அடிகளில் முறையே நுண்மைநிலையும் பருமைநிலையும் வெளிப்படையாக உணர்த்தப்படுகின்றன. இவ்வாறே இரண்டு நிலைகளும் விளக்கமாகும் பல அடிகளைக் காட்டிச் செல்லலாம். 'அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்' எனப் பருமை நிலைக் காட்சியில் தொடக்கமுற்ற பாட்டு, "பிரமன் மால் அறியாப் பெற்றியோனே" என நுண்ணிலைக் காட்சியில் முடிகின்றது. இறைவனின் இருநிலைத் தெளிவு இஃது!

இவ் விருநிலைத் தெளிவு, மாணிக்கவாசகப் பெருமானின் இன்பநிலை விளக்கத்திற்குத் துணைநிற்குமாற்றை இனிக் காண்போம்.

(தொடரும்)

இகழ்வதுபோலப் புகழ்தல்

பேராசிரியர்,
வித்துவான் பாலூர்: கண்ணப்ப முதலியார், M. A., B. O. L.

தமிழ்மொழி இலக்கணச் சிறப்பில் ஈடும் எடுப்பும் அற்றது. இம்மொழியில் ஐந்திலக்கணங்கள் உள. அவை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன. அணி இலக்கணம் என்பது செய்யுளில் கூறப்படும் பொருள்களை அழகு தோன்ற அலங்காரம் தோன்றப் பாடப்படுவதாகும். இதனை நன்னூல்,

"பல்வகைத் தாதுவின் உயிர்க் குடல் போல் பல சொல்லால் பொருட்கிடன் ஆக, உணர்வினில் வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள் என்று கூறுதல் காண்க. அத்தகைய அணிகளுள் ஒன்று நிந்தாத்துதி என்பது. இதனைத் தமிழில் கூறினல் இகழ்வது போலப் புகழ்வது என்பதாம். இதற்கு இலக்கணம் கூறவந்த இலக்கண விளக்கம் பழிப்பது போலும் பான்மையின், மேன்மை புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி" என்று கூறுகிறது.

இத்தகைய அணிய அமைய நமது வள்ளலார் பாடியுள்ள பாடல் ஒன்று சுவை மிக்குடையதாகக் காணப்படுதலின், அதனை ஈண்டு விளக்குவோமாக - அப்பாடல்,

இறகெடுத்த அமணர் குலம் வெறுத்த சொக்கேயி
தென்ன ஞாயம் அறுகெடுத்த சடைமுடிமேல்
மண்எடுக்க மாட்டாமல் அடிபட்டு ஐயோ
பிறகெடுத்தீர் வளையல் விற்றீர் சொற்கேளாப்
பிள்ளைகளைப் பெற்ற தோஷம் விறகெடுத்தீர், என்செய்வீர்
விதிவசமதான் யாவரையும் விடாதுதானே. என்பது.

இக்கட்டுரை வள்ளலார் என்ற பத்திரிகையின் ஆசிரியர் அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது.

இப்பாடலில் இகழ்வன போன்றவை அறுகு எடுத்த சடை முடி மண் எடுக்கமாட்டாமல் அடிபட்டு, ஐயகோ, பிறகு எடுத்தீர். வளையல் விற்றீர் சொல் கேளாப் பிள்ளைகளைப் பெற்ற தோஷம் விறகெடுத்தீர் என்பன.

இனி இப்பாட்டின் பொருளை அலசி ஆய்வோமாக. இப்பாடல் மதுரைச் சொக்கலிங்கப் பெருமானை எண்ணிப் பாடியதாகும். இது சொக்கே என்று இறைவனை விளித்திருப்பதனால் புலனாகிறது. சொக்கு என்பது அழகு எனப் பொருள்படும். ஆகவே, சொக்குடையவன் சொக்கனாயினான் அவனே சொக்கநாதன் என்றும், சொக்கலிங்கப் பெருமான் என்றும் கூறப்படுவான்.

சமணர்கள் மதுரையில் தொக்கி இருந்து சைவ நாட்டை சமண மயமாக்கினர். பரம்பரைச்சைவனான கூன்பாண்டியனும் சமணர்களின் தீய உபதேசத்தினால் சமணன் ஆயினான். இதனால் வைதிக கருமங்கள் கெட்டொழிவதை அறிந்த இறைவர் அம்மதத்தைப் பாண்டி நாட்டில் தலை எடுக்க ஒட்டாமல் வேருடன் களைந்தெறிந்தார். களைந்து எறிந்தற்குத் துணையாக இருந்தவர்கள் நெடுமாறனது வாழ்வரசியார் ஆகிய மங்கயர்க்கரசியாரும், மந்திரி குலச் சிறையாரும் ஆவார். ஆனால் வேரறுத்தவர் திருஞானசம்பந்தர். திருஞானசம்பந்தர் சமணர்களுடன் கனல் வாதம், புனல் வாதம் புரிந்து சமணர்களை வேரோடு அலைக்கழித்தனர். இச்செயலை இறைவனது திருவருளைப்பெற்றே ஆளுடைய பிள்ளையார் புரிந்தனர் இதனை தோணிபுரத் தோன்றலார் நன்கு அழகுறவும் ஆணித்தரமாகவும்,

''வேத வேள்வியை நிந்தனை செய்துழல் ஆதமில்லி அமணொடு தேவரை வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே, ஞாலம் நின்புகழே வேண்டும், ஆலவாயில் உறையும் எம் ஆதியே.''
என்றுபாடி உணர்த்தல் காண்க.

திருஞான சம்பந்தர் சமணர்களை வேரோடு களைந்து எறிந்தவர் ஆயினும், இசசெயறகுத் தோன்றாத் துணையாய் இருந்தவர் மதுரைச் சொக்கலிங்கப் பெருமானே ஆதலின், ஈண்டு

நம் வள்ளல் பெருமானுர் 'இறகு எடுத்த அமணர்குலம் வேர் அறுத்த தம் சொக்கே' என்று கூறுவார் ஆயினர்.

சமணர்கள் சில பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டிருந்தனர். அவை, இரவில் உண்ணுதவர், அருந்தும் பொழுது உரை ஆடாதவர், ஆடை இன்றிததிரிபவர். இப்படிப் பல பழக்கம் உடையவர்கள்.

இவற்றுள் ஒன்று மயில் இறகைக் கையில் கொண்டு இருப்பது. இதனை நம் சைவத்திருமுறை பீலியை இடுக்கி நாடு பெரியதோர் தவம் என்று எண்ணி என்றும் இன்மயில் இறகுறு தழையொடு செயல் மருவிய என்று குறிப்பிடுதல் காண்க. இது குறித்தே ஈண்டு வள்ளலார் இறகு எடுத்த அமணர் என்றனர்.

இராகம் : கரஹரப்ரியா தாளம் : ஆதி

பல்லவி

பழனிமலை வாழும முருகா வா
பரமசிவன் மகிழும சிவபாலா வா (பழனி)

அனுபல்லவி

முருகா முருகா என்று பக்தாகள அனுதினம்
ஆரவாரம் செய்து அஞ்சலி செய்யும் உயர் (பழனி)

சரணம்

கோயில குளம் சென்று கும்பிட வேணுமோ
கோடிபடி ஏறி இரங்கவும் வேணடுமோ
வாடிய முகத்துடன் பக்தியுடன் நினைததால்
ஓடிவந்துத விடும் உததமன நீயனறே (பழனி)

வி. கே. முத்தையா பிள்ளை, பி. ஏ., பி. எல்.
வண்ணுர்பேட்டை, திருநெல்வேலி–3.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 16, இதழ் 5-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

57. மாதர்ப்பிறைக்கண்ணியானைமலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங்களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன்.

Nature sometimes spoke to our author of God. The union of sexes even in animals one day spoke to him as a revelation of divine things

57. I'll follow those who going to the shrine their
praises sound,
With blooms and water for the god who wears
the moon so mild
All lovely in His locks, a garland wreathed His
neck around,
And with Him sing they Parvati, the mountain
god's fair child.
Once as I went to Aiyaru, with light and
reverent tread,
I saw come two young elephants, male by
loved female led,
And in that sight I saw God's foot, saw
secret things unsaid.

(தொடரும்)

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

அரசியல்கிழார் சுந்தரனர்

திரு. இர. குழந்தைவேலு அவர்கள் M. A.,
லா ல கு டி.

1

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தம் அறிவு உழைப்பில் மலர்ந்தது மனேன்மணீயம். தமிழ்ப் பிறப்புடைய இம்மனேன் மணீய நாடகப்பிறவியின் ஒளி, கூத்திலக்கியக் கலைவளர்ச்சிக்கு உயிர்ப்பு நல்கிவருதல் கண்கூடு. திருவருளுடை முனிவர் சுந்தரனர் புகழ்மணம் சூழ்ந்து படர்ந்த இந் நாடகத்தில் வரும் பணபாளர். இவ்வடிகளாரிடதது எவ்வுயிர்க்குஞ் செந்தணமை பூண்டொழுகும் திறம் வளர்ந்த அறநெஞ்சம் 'என கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் வழிபாட்டு அடிப்படைமீது நிலைத் தது; பழுதத கேடடுக்குக இரையாக நின்ற நாடகத் தலைமைச் செலவி மனேன்மணியின் நெஞ்சத்துக்கு ஏற்றவாறு செவ்வழி அறிவுறுத்தி அறம் வெனறு உயரும் உயருலகம் கண்டு பொலிந்தது

2

மனேன்மணி செல்வமொளிர்ந்த பாண்டியன் தொல்குடி யைப் பெருமைப்படுத்தற்கு அரசரில்லத்துப் பிறந்தவள் அம் மகள் மங்கைப்பருவம் சிறப்புற்று விளங்கினள். காதல் எண்ணம் அவளிடத்துத் தடிததது. அவள் உள்ளத்து மிகுதியாய் முறுகி எழுந்த அக்காதலேய் காய்ந்தது. காதலுக்கு அடிமையாய் மயங்கிய மனேன்மணியிடத்து நேரிற்கணடவற்றைக் கொண்டு சீவகனரிடம் அவனைக் கைததலர் பற்றி மணக்குததக்க ஆண் மகன்,

"உலகுள மற்றை யரசெலாம் நலமில்
கள்ளியுங் கருவேற் காடுமா யொழிய,
சகமெலாந் தங்க நிழலது பரப்பித்
தொலைவிலாத் துன்னலர் வரினும் அவர்தலை
யிலையெனும் வீரமே இலையாய்த் தழைத்து
புகழ்மணங் கமழுங் குணம்பல பூத்து,
துனிவரு முயிர்க்குள துன்பந் துடைப்பான்
கனியுங் கருணையே கனியாக் காய்த்து,
தருமநா டென்னும் ஒருநா மங்கொள்
திருவாழ் கோடாஞ் சேரதே சத்துப்
புருடோத் தமனெனும் பொருவிலாப் புருடன்,
நீங்கி லில்லை நினது
பூங்கொடி படரப் பாங்காந் தருவே." (I. IV. 188-199)

என்று முனிவர் சுந்தரனுர் எடுத்துரைத்தார். இங்கு அடிகளார் தம் பணிசெய்து கிடக்கும் உள்ளம் நணி விளங்கும். பருவக் கொடி மனோன்மணி காதல் ஏக்கத்தால் நோவுபடுதல் தீர்ந்து மண்ணில் நல்ல வண்ணம் வாழவேண்டும். முனிவர்தம் அன் பொழுக்கில் நடக்கும் எண்ணம் ஈது. இது செயல் வடிவு அடைதல் வேண்டும் என்பதே அவர்தம் கருத்து.

உயர்ந்த தன்னுரிமையோடு கூர்த்தெண்ணிக் காத்தலும் கடிதலுமாயது அரசியலறிவு. அவ்வரசியலறிவு 'குடிலன்' என் னும் நஞ்சால் விழுங்கப்பட்ட நிலையில் சீவகனுர்,

"சொல்லிய தெல்லாஞ் சுந்தர முனிவரே!
புருடோத் தமனெனும் பொறையனே நமக்கு
மருமா னுக மதித்ததும் அவரே;
என்றுங் குழந்தை யன்றே; மனறல்
விரைவில் ஆறற வேண்டும; நாம்இது
வரையும் மறதியா யிருந்தது தவறே
யாம்இனித் தாமத மின்றியிம் மணமே
கருமமாயக் கருதி முடிபபாம்;
வருமுன் கருதும மந்திர வமைச்சே! (II, i, 1-9)

எனக் குடிலனிடத்து கூறிமுடித்தார்.

இங்ஙனம் முனிவர் சுந்தரனூர்தம் மனத்திலே கண்டு மனோன்மணி நல்லாள் ஏற்கத் தகும் மணாளன புருடோத்தமனே என்று சீவகனூர்க்கு உணர்த்தவும், அடிகளாரிடத்து வளர்ந்த எண்ணக்கருவை அவ்வரசனூர உணரவும தலைப்பட்டனர் என்ப தனை மனோன்மணீயம் இயம்பலாயிற்று.

தலைமகன் புருடோத்தனொடு, அடிகளார் முன்னே நேரடித் தொடர்பின்றியும் காணுதும் அவனது சிறப்பியல்புகளைப் பாராட்டலாயினூர்; சீவகனூர் மருமகனுகக் கொள்ளத்தக்கவன் அவ்வீரனே எனவும் அறிவுறுததலாயினூர். முனிவர்சுந்தரனூர் ஒருபோதும் காணுதே புருடோததமனது பண்புநலனைக் கருதி யுரைக்கலாயினூர் என்பது இநநாடகக் கதையோட்டததால் வலியுறும். கருத்துக்கு அடித்தளமினறிக கூறிய முனிவர்தம் கூற்று முரணுடையதன்றே? அடிகளார் மேற்கொண்ட பணி செய்து கிடக்கும் நெறிக்குப் பொருந்துவதா? இந் நெறிப் பிழைக்குச் சீவகனூர் உடன்படுவது தகவுடையதா? முனிவரி டத்துப் பெருகிய குறைகளாகத் தெரிவு காணுதற்குத்தோன்றும இவ்வகை எண்ணங்கள் ஈணடு கொள்ளததக்கவை.

3

இராமாயணத்துச் சுமந்திரனூர்தம் அரசியற்கலை நெறி வழியே தயரதனூர்தம் அருளாட்சி மக்கள் நெஞ்சம் குளிரக் காதலூட்டி மிகமிக இனித்து ஓங்கியதெனக் கொள்ளலாம். ஈண்டுச் சுமந்திரனூரிடத்து வளர்ந்து அறமாகக் கனிந்த அர சியல் நுட்பத்தினைக் கருதவேண்டும். அதனை இங்கு உய்த் துணர்ந்து கொள்ளுமாறு புலவர் பெருமானூர் கம்பர் இராமாய ணத்தை வகுத்தமைத்துள்ளனர்.

கைகேயின் தூய உள்ளம் திரிந்தது. அவள் தன் தீப்பய னூட்டும் கயமை நெஞ்சத்து உரிமை மொழியாய் பரதன் அரசு ஏற்றற்குத் தயரதனூரிடத்துத் தட்டிக் கேட்டாள். அக்கொடுங் கேட்டால் அருள் வடிவான தயரதனூர் வாழவைத்த அன்பாட்சி யினைத தொடக்கத்து இராமன் கைவிட நேர்ந்தது. எனவே சுமந்திரனூர் செலுத்திய நெடுந்தேரில் இராமன் ஏறிக்

காட்டிற்குப் புறப்பட்டான. சீதையும் இலக்குவனும் வாளா விராது இராமனது காட்டுச செலவிற் கலந்தனர். அயோத்தித் திருநகரத்து மக்களும் திரணடு தேரினைத தொடர்ந்தனர்.

அந்நகரினின்று விரைந்து சென்ற தேர் நெடுந்தொலை வினைக் கடந்தது; சேய்மையில் விளங்கிய பொழிலை எய்திற்று. இருள் சூழ்ந்த வேளை அது. ஆதலான், சிவந்தவாய்ச் சீதையும் கரிய செமமல் இராமனும இலககுவன உடனிருக்க, அச்சோலை வாழ் முனிவரொடு உறையலாயினா. தேரொடு நடந்த மக்களும் சோலையின் புறததைச சூழநது தங்கித தளர்சசியால் கண ணுறங்கத் தலைப்பட்டனர்.

இங்ஙனம் தன்னொடு உடன்போக்குக் கொண்ட மக்களை அயோத்திககுப் போக்குவது அரிது என்பது இராமன் துணிபு. எனினும், அத்தகு பேரனபினுரை நகர்க்குச் சேர்க்க இராம னிடதது ஓர் எணணம் அரும்பியது தேரோட்டியாக அமைந்த அமைச்சர் சுமந்திரனுரிடததுத் தேரை நகர்நோக்கி ஓட்டல் வேண்டுமெனத் தன விருப்பம் மொழிந்து இராமன் வேண்டி நின்றுன். அவ்வேணடுதலில், மாநகர்க்குத் திரும்பின், மக்கள் உறங்கி யெழுந்தபோது, அததேரின அடிச்சுவட்டைக் கண்ட வளவில் ‘இராமன் தன செலவை இடைவழியில் முறித்துத் தேரேறி இரவில் நகர் மீண்டிருத்தல் வெளிப்படை’ எனக் கருத இடனுணடு எனவும், அவ் வெணணச் சூழலில் உள்ளத்துள் ஆழ்ந்து கிடக்கும் பிரிவுததுயராற்றி மக்கள் நகர்க்கு உவந்து மீள்வதற்கு வாய்ப்புண்டு எனவும சுமந்திரனுர்க்கு நுணுக்க மாகக் காட்டினுன் இராமன்.

இவ்வன்பினை நெஞ்சத்தில் அடிப்படையாகக் கொண்டே இராமன் சுமந்திரனுர்க்கு வேண்டியுரைத்தான். எனினும், நெடும்பிரிவுக்கு ஆறருமையால் அக் கருத்தைச் சுமந்திரனுர் போற்றவில்லை. அவர் தம கவலைக்கொதிப்பைப் பொறுக்கவல்ல பக்குவத்தில் பலவாறு எடுத்துரைத்தான் இராமன். சுமந்திரனுர் அதற்கு உடன்படடு நகர்க்குத திரும்பலாயினுர். அவ்விரவில் இராமனும் தன் தலைவியொடும் தம்பியொடும் செலவழுங்காது காடு நோக்கிப் புறப்பட்டான்.

சுமந்திரனுர் காடுகடந்து நகர் எய்திய பின்னர்த் திரும்பப் பரதனெடு கங்கையின் வடகரையினைக் குறுகும் வாய்ப்பு வாய்ந்தது. அவ் வமைச்சர், நகையிழந்த முகத்துப் பரதனுக்கு,

“ கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற் குயிர்த்துணைவ னுயர்தோளான்
வெங்கரியி னேறனையான் விற்பிடித்த வேலையினுன்
கொங்கலரு நறுந்தண்டார்க் குகனென்னுங் குறியுடையான் ”

எனவும்,

“ கற்காணுந் திண்மையான் கரைகாணுக் காதலான்
அற்காணிற் கண்டனைய வழகமைந்த மேனியான் ”
(*கம்பரா. அயோத்தி. குகப்படலம், 25, 26*).

எனவும் குகனது தனிப்பண்புகளைப் புலப்படுத்தலாயினர்.

அன்றிரவு பொழிலிடத்து இராமனைப் பிரிந்த சுமந்திரனுர் மன்னர் மன்னனுர் மகனையும் அவனுக்கு உறுதுணையாகிய குகனையும் காணுது பரதனிடத்துப் போலிப் பண்புகளையே அடுக்கி மொழிந்தனரோ? என்ற எண்ணம் இங்குக் கற்பவர் நெஞ்சத்தை உறுத்தும். திருவள்ளுவர் வழியில் சுமந்திரனுர் தம் அரசியலாற்றலையும்,

“ அலங்கண் மன்னனை யடிதொழு தவன்மன மனையான் ”
(*கம்பரா அயோத்தி. மந்திரப் படலம், 51*)

எனக் கம்பர் குறிக்கும் உயிர்நிலையில் மன்னனுர் உள்ளத்தனைய அமைச்சரது உயர் நெஞ்சவோட்டத்தினையும் மதித்துத் தெளிந்தவர்க்கு அத்தகைய ஐயந்தோன்ருது.

தன்னுடன் சோலையில் தங்கிய நன்மக்களை நகர்க்குப் போக்காது அவ்விடத்திலிருந்து காட்டிற்குப் போய்ச்சேர்தல், அனைவர் நெஞ்சத்தும் வெம்மை விளைப்பதாகும் என்று மக்கள் பூண்ட அன்பினை நோக்கினுன் இராமன். இவ்வுள்ளக்கிடக்கையினைச் சுமந்திரனுர்க்கு அறிவிக்குங்கால் “ எந்தையே ” (அயோத்தி, தைல மாட்டு படலம், 19) என்று இராமன் குறிப்பிடுதலைக் கற்கலாம். எனவே ‘தந்தை போனறவா’ என்ற சிறப்

பிணைச் சுமந்திரனர், இராமனிடத்து ஒழுகும் தனித்திறத்தால் அடைந்தார் என்பது கருதத்தக்கது. அமைச்சர் தம் தாய்மை உள்ளத்தைக் காட்டப் போதியது இது. தம்மிடத்து வாழ்நரைப் பேணியும் பிரிந்தாரைச் சேர்த்தும் அரசு தழைத்து விளங்கிப் பொலியச்செய்யும் வல்லமை சான்றவர் சுமந்திரனர். இத்திறத்து அருளுள்ளம் வாய்ந்த அவர், இராமன் நாட்டினின்று அகன்ற பின்னர் அன்பற்றுக் கவலையின்றி வாளாவிருந்திருத்தல் அவர் தம் மனப்பான்மைக்கு இயல்வதன்று எனவே இராமன் காடு தங்க நேர்ந்த நாள்முதல் வலிமையுடன் தாம் வகுத்த நெறியில், அனைவரிடத்தும் நிகழும் அனைத்து வினைகளையும் ஒற்றர்வழி எக்காலத்தும் தெளிதலைத் தங்கடனுகக்கொண்டு, சுமந்திரனர் ஒற்றரை ஏவுதல் செய்து காட்டில் நிகழ்ந்தவற்றைக் கூர்ந்து நோக்கி வந்திருத்தல் உறுதி. இந் நம்பிக்கையில் தயரதனரது மனமனைய உள்ளம் சுமந்திரனர்க்கு வளர்ந்திருந்த சிறப்புத் திரளுதலை இங்கு நினையவேண்டும்.

4

முனிவர் சுந்தரனர்தம் வாழ்க்கையை ஆராயுமிடத்து அறிவாலும் மனமாசற்ற ஒழுக்கத்தாலும் பண்பட்டவர் என்பது பெறப்படும். பணிசெய்து கிடப்பதே வாழ்க்கையின் குறிக்கோளாக மதித்த அடிகளார்க்கு மனோன்மணி நல்லாளையும் அரசனுரையும் காக்கும் பொறுப்பு இயல்பாக வந்து சேர்ந்தது. இங்ஙனம் கருத்துக் கொள்ளுதற்கு,

> "உன்னையு முன்குலத் துதித்தநம் மனோன்மணி
> தன்னையுஞ் சங்கரன் காக்க! தயாநிதே!" (I, i, 100-101)

என்னும் முனிவர் மொழிவு சான்று அளிக்கின்றது.

பாண்டிநாடு சீர் தாழாது சிறத்தற்குச் சீவகனரிடம் அமைந்து கிடந்தது. அவ்வரசனும் புதுத்தலைநகர் பீடுயர் நெல்லையில் அடங்கி நல்வாழ்வு வாழ நினைந்தார். மானம் நிலைத்து வீறுபெற வாழ்ந்த வாழ்வினைக் குடிலன் வேரொடு குலைத்தற்கு அம் மன்னரே தம்மையும் அறியாது இடங் கொடுத்திருந்தார். இக் குறிப்பை வெளிப்படுத்தற்கு,

"புத்தியே சகல சக்தியும்! இதுவரை
நினைத்தவை யனைத்தும் நிறைவே றினவே.
உட்பகை மூட்டிப் பெட்புற் றிருந்த
மதுரையாம் முதுநகர் விடுத்து மன்னனைப்
புதியதோர் பதிக்குக் கொணர்ந்து புரிசையுங்
கட்டுவித் தோம்நம் இட்டமாம் வகையே;
நாமே யரசும் நாமே யாவும்;
மன்னவன் நமது நிழலின் மறைந்தான்;
பிடித்தாற் கற்றை விட்டாற் கூளம்;
மதுரையை நெல்லை இனிமேல் வணங்குமோ?" (I, ii, 1-10)

என்ற குடிலனது தனிமொழியின் பகுதி வேண்டுவது.

சீவகனுர் அவ்வவலத்தால் வீழ்ச்சியுறின், சுந்தரப்பாவை மனேன்மணியும், நாடும், இடையூறுபட்டு வாட நேரும் என்ற போக்கை முனிவர் விளங்கிக் கொண்டார், இதனை உணருதற்கு,

"குடிலன் செய்யும் படிறுகள் முனிவர்
அறியா தவரோ?" (I, i, 117-118)

என்று நகரத்து மகன் ஒருவன் அளந்து காட்டிய உரைதுணை நிற்கும். இம்மொழியையும் ஈண்டு வல்லமையால் வளர்ந்த அல்லலுறுததும் தீங்கைத் தவிர்க்கும் குறிக்கோள் தழுவிய அற நெறியில் பிறந்த பெருமை முனிவர் சுந்தரனுர்க்கு உண்டு.

இத்துணையும் மறைவாக உணர்ந்த பலர் புகழ் நல்லிசை முனிவர் எதனையும் இருவகைப் புலனுணர்வுகளால் ஊன்றி விளங்கிக்கொள்ளும் பெற்றியாளராவர். முதலாவது புலனுணர்வு தம் பொறிகளின் ஆற்றலாலும் அறிவாலும் அறிதலில் நிகரற்ற வன்மையது. பிறர்தம் கண் அறிவு ஆகியவற்றின் வாயிலாக உண்மை உணரும் நுணுக்கத் தொடர்புடையது மற்றொரு புலனுணர்வு. இங்கு,

"யோசனை வேண்டிய தன்று. நடேசன்
என்றுள னொருவன். ஏவில்,
சென்றவன் முடிப்பன் மன்றல் சிறக்கவே"
(I, iv, 204-206)

என்னும் கருத்து, இரண்டாவது புலனுணர்வினது அடிப்படையில் தம் கண்ணே அனைய நடராசனது நுண்ணறிவொடு இயைந்து வழுவின்றி ஆய்ந்தமையால் அடிகளார் வாயிலிருந்து பிறந்தது.

முனிவரது இச்சிறப்பு,

"தவசிகள் வேடந் தாங்கினோர்
ஆலயம் ஒன்றையே அறிவர்" (I, iii, 11-12)

எனக் 'கெடலறு சூழ்ச்சிக் குடிலனை' யும் மயக்கி விட்டது. மனோன்மணியைக் காக்கும் கடமையே முனிவரது குறிக்கோளின் திண்மை வாய்ந்த உயிர்நிலையாய் ஒளிர்வது. முனிவர் எதனையும் கூர்த்துக் கூர்த்து நோக்கித் தள்ளுவது தள்ளி, நல்லது நாடலாயினர். அப்பொறுப்பும் பொறுமையும் கொண்டு உள்ளமும் உதடும் உறவுபட, நாடும் அரசனும் மனோன்மணியால் வீழாது நெடிது தழைக்கப் புருடோத்தமனைச் சீவகனர் மருமகனாக ஏற்றற்கு முனிவர் இயம்பிய உரைக்கு அடிப்படை உண்டு என்பது மேலைத் தெளிவுகளால் விளக்கமுறுதல் வெளிப்படை.

5

இவ்வளவில் முனிவர் சுந்தரனரும் கம்பராமாயணத்து அமைச்சர் சுமந்திரனரும் மிகப் பொருந்தி ஒப்பராவர். முனிவர் சுந்தரனர், புருடோத்தமனைக் குறித்துக் கூறியது, சுமந்திரனர் முன்னர்க் காணாது குகனது பண்பினைச் சொல்லியதொடு பெரிதும் ஒக்கும். இவ்விருபகுதிகளையும் இணைத்து எண்ணுங்கால் சுமந்திரனரை ஒப்பப்பணி செய்து கிடத்தலை மேற்கொண்ட துறவியார் சுந்தரனரையும் அரசியல் ஆட்கொணடுவிட்டது, என்று அறியலாம். இப்புதுமை நெறியில் மக்கள் வாழுஞ் சூழலறிந்து பணிசெய்ய முனிவர் சுந்தரனர் வாழ்வுத் திறததிற்கும் பல்துறை அறிவொடு அரசியல் தெளிவின் கூர்திறமும் வேண்டற்பாலது என்பதனைப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை குறிப்பிடுவர்.

மாரியல்லது காரியமில்லை

பொன். குமார சுவாமி அடிகள்,
காஞ்சிபுரம்,

அன்பர்களே! இவ்வாக்கியம் ஔவை யெம் அன்னையார் அமுதமொழியென்பது நந்தமிழுலகம் நன்கறியும். இதன் பொருள், மழை பெய்யாதாயின் உலகில் ஒரு காரியமும் நடைபெறுதென்பதாம். இதனை நம் முதற் பாவலர், திருக்குறளில் வான்சிறப்பென்று பத்துத் திருக்குறட்பாவால் விரிவாகப் பேசியுள்ளார். நம் மூதாட்டியார் அதனைச் சுருங்கச் சொல்லி, விளங்க வைத்தல் என்பதற் கிணங்க, சிறிய வாக்கியமாக அடக்கிக் கூறியுள்ளார். வானசிறப்பின் முதற்குறளில் வானின்றுலகம வழங்கி வருதலால் தானமிழ்த மென்றுணரற்பாற்று. அதாவது அமிர்தம் உண்டவர்கள் சாவாது நிலை பெற்றிருத்தல் போல் உயிர்களின் பிறப்பு எஞ்ஞான்றும், இடையருது உடம்பொடு காணப்பட்டு வருதலால், மழையை அமிர்தமென்று மதிக்குந் தகுதியுடைய தென்றூர். தனக்கு உதவிசெய்து வருபவரது பெருமையை உணர்ந்தொருவன் போற்ருனுயின் அவன் செய் நன்றி கொன்ற மகனுய்ச் சிறுமையுறுதல் போல் தமக்கு இதஞ் செய்து நிற்கும் இறைவனது திருவருளாகிய மழையை மக்கள் மாட்சியுடன் மதித்துப் போற்ருராயின் தாங்களும், மதியிலராய் மதிப்பிழப்ப ரென்பதாம். உணவை உண்பவர்க்குச் சுத்தமாக நல்ல உணவுகளை உளவாக்கித் தானும் உணவாய் நிற்பது மழை யென்றனர். மழையானது பலவகையானும் உயிர்களது பசியையும், தாகத்தையும் தீர்ப்பதாகும். கற்பிற் சிறந்த சீதா பிராட்டியார் இலங்கையிற் சிறையிருந்தபோது, தூது வந்த மாருதியிடஞ் சொல்லுங் காலத்தில் இச்சிறை விட்டு எங்குஞ் செல்வதில்லை. ஒவ்வோர் சமயம் என் நாயகன் திருமேனியை நிகர்த்த இந்நீர் நிலைக்குச் சென்று சிறிது நீரருந்தி உயிர் வாழ்வேனென்பதை,

தீர்விலேனிதொரு பகலுஞ் சிலை
வீரன் மேனியை மானுமிவ் வீங்குநீர்
நார நாண்மலர்ப் பொய்கையை நண்ணுவேன்
சோரு மாருயிர் காக்குந் துணிவினுல்.

என்றனர் கம்பர்.

இதனுல் மக்களுயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுதலால் மாரியல்லது காரியமில்லை என்றனர். மழையானது வேண்டும் பருவகாலத்து பெய்யாது பொய்க்குமாயின் விண்ணின்று பொய்ப்பின்,விரிநீர் வியனுலகத்துண்ணின்றுடற்றும் பசி.

மக்கள் சீரைத்தேடின் ஏரைத்தேடென்றும், தொழுதூண் சுவையின் உழுதூண் இனிதென்றும், உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு — என்றுங் கூறிய மூத்தோர் சொல் வார்த்தை, அமுதமாயினும் ஏரின் உழார் உழவர் புயலென்னும் வாரிவளங்குன்றிக்கால்; மழையென்னும் வருவாய் தன்பயன் குன்றில், உழவர் ஏரால் உழுதலைச் செய்யார்—எனவே மழையின்மை உழவின்மைக்கும், உழவின்மை உணவின்மைக்கும், உணவின்மை உயிரின்மைக்கும், உயிரின்மை உலகின்மைக்கும் ஏதுவாகும். இதனுல் மழையாலுழவும், உழவாலுணவும் உணவாலுயிரும், உயிராலுலகும் உளவாமென்பதால் மாரியல்லது காரியமில்லை யென்றனர் என்றுணரவும்.

மக்களது முயற்சியால் ஆக்கமும் மடியாற்கேடும் வருமெனினும் அம்முயற்சியும் மடியும் மழை யுண்மை இன்மைகளால் நிலைபெறுதலின் அம்மழையே ஆக்கமுங் கேடும் ஆக்கவல்லதாம். கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்ருங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை என்றனர். விசும்பிற்றுளி வீழின் அல்லான் மற்ருங்கே பசும்புற்றலை காண்பரிது. புல்லும் மரனும் ஓரறிவினவே என்பதிலக்கணம். மழையில்லையானுல் ஓரறிவுயிருந் தோன்ருதெனின் மற்றவுயிர்களின் தோற்றஞ் சொல்லவா வேண்டும்,

மேகமானது கடலில் நீரை முகந்து அதிற் பெய்யாதாயின் நீர் வாழுயிர்கள் முத்து பவழம் முதலிய கடற்படு திரவியமும் விளையாதனவாகும். நெடுங்கடலும் தன்னீர்மை குன்றுந் தடிந் தெழிலி தானல்காதாகிவிடின் என்றார். வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு சிறப்பொடு பூசனை செல்லா தென்றனர். மழை பெய்யாதொழியின் இவ்வுலகததாரால் இங்கு தேவர் களுக்குச் செய்யப்படும் பூசையும் விழாவும் நடவாதென்றனர். தானந்தவமிரண்டுந் தங்காவியனுலகம்வானம் வழங்காதெனின். வானஞ் சுருங்கிற் றானஞ் சுருங்கும். மழை பெய்யாதாயின் அற நெறியா லீட்டிய,பொருளைத் தக்கார்க்கு உவகையோடு இல்லறத் தார் செய்யுந் தானமும் மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு, விரதாதிகளால், உண்டி சுருங்கல் முதலிய துறவறத் தார் செய்யுந் தவமும் இரண்டறமும் இல்லாதனவாகும் என்ற னர். ஆகவே மன்னுயிர்த் தொகுதிகள் மழையின்றி வாழா தென்பது தெள்ளிதிற் புலனும்-தோன்றாத் துணையாகிய ஆதி பகவன் தன் திருவருள் வடிவாகிய சத்தியை மழை யெனத் தோன்றுந் துணையாக நிறுத்திப் பெய்வித்து உலகுயிர்களைக் காத்து வருகின்றான். நம் சமயகுரவராகிய மாணிக்கவாசகரும் மேகத்தை அம்பிகையின் திருமேனியாகவும், மின்னலை உமா தேவியின் இடையாகவும் இடியோசையை அம்மை சிலம்பொலி யாகவும், வானவில்லை இறைவியின் திருப்புருவமாகவும், சிவ பெருமான் உயிர்கண் மாட்டிரங்கி யருளுங் கருணையை மழை யாகவுங் கூறிப் போற்றுகின்றார். ((அடுத்த இதழில் முடியும்)

உ

திருச்செந்திலாண்டவன் துணை

'குமரகுருபரன்'

திங்கள் வெளியீட்டின் சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு:

தனிப்பிரதி (உள் நாடு)	0–13 ந. பை.
வருடச் சந்தா	ரூ. 1–50 ந. பை.
வெளி நாடு வருடச் சந்தா	5 ஷிலிங் அல்லது ரூ. 3–25 ந. பை.

நிர்வாக ஆசிரியர்.

உ

சிவ சிவ

புதுடில்லி ஸ்ரீ சுவாமிநாத சுவாமி மந்திரில் பூசனை புரியும் பண்டா (சிவாச்சாரியார்)

(படிக்காசு) உதவிநிதி - நிலப்பெறுமானம்

ரூ. 30,000

புதுடில்லி மோதி பாக் (Moti Bagh) சமீபத்தில் உள்ள இராம கிருஷ்ணபுரத்தில் ஒரு குன்றில் நிர்மாணிக்கப்பெற்றுவரும் சுவாமிநாத மந்திரில் (கோயிலில்) நாடோறும் ஸ்ரீ சுவாமிநாத சுவாமி திருமேனி தீண்டிப் பூசனை புரியும் சிவப்பிராமணர் ஒருவர்க்கு உதவியளித்தற் பொருட்டு இத்தருமம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றது. இது "புதுடில்லி ஸ்ரீ சுவாமிநாத சுவாமி மந்திரில் பூசனை புரியும் பண்டா (சிவாச்சாரியார்) (படிககாசு) உதவிநிதி" எனப் பெயர்பெறும்.

2. இதன் பிற்சேர்க்கையில் (ஷெடியூலில்) விளக்கம் கண்டிருப்பதும் நம்பேரில் பட்டா மிராசுடன் நாம் சர்வ சுதந்திரத்துடன் அனுபவித்து வருவதுமான சென்னை ராஜ்யத்தி லுள்ள தஞ்சாவூர் ரிஜிஸ்தரேஷன் டிஸ்டிரிக்ட்டு திருவிடைமருதூர் சப்ரிஜிஸ்தரைச் சேர்ந்த கும்பகோணம் தாலுக்கா, 44 நெ. சூரியமூலை வட்டம் சூரியமூலை கிராமத்தில் நன்செய், புன்செய் 20 ஏக்கர் 78 செண்டு பரப்புள்ள நிலங்களினின்று வரும் வருமானத்தில் சர்ககார் கிஸ்தி, கிராம சிப்பந்திச் செலவு கிராம சமுதாயச செலவு வகையறு செலவுகள் போக எஞ்சியுள்ள நிகர வருமானத்தைக் கொண்டு இதில் பின்விவரிக்கப்பட்டுள்ள தருமங்கள் நம்மால் நடத்தப்பெற்றுவரும்.

3. அ. புதுடில்லியில் மோதிபாக் (Moti Bagh) சமீபத்தில் உள்ள இராமகிருஷ்ணபுரத்தில் ஒரு குன்றில் நிர்மாணிக்கப் பெற்று வரும் ஸ்ரீ சுவாமிநாத சுவாமி மந்திரில் ஸ்ரீ சுவாமிநாத சுவாமி திருமேனி தீண்டிப் பூசனைபுரியும் சிவப்பிராமணர் ஒருவருக்கு (படிக்காசு) உதவி அளிக்கப்பெற்று வரும்.

ஆ. நேபாளம் பசுபதிநாத கோயிலில் கர்நாடகப் பிராமணர் பூசனை செய்யும் உரிமை பெற்றுப் பூசனை புரிவது போலக் கும்பகோணத்துக்கு அருகில் உள்ள (திரு ஏரகம் எனப் பெறும்) சுவாமிமலையில் ஸ்ரீ சுவாமிநாத சுவாமியைப் பூசனை புரியும் உரிமை பெற்ற சிவப்பிராமணர் ஒருவர் புதுடில்லி ஸ்ரீ சுவாமிநாத சுவாமி மந்திரில் ஸ்ரீ சுவாமிநாத சுவாமி திருமேனி தீண்டிப் பூசனை செய்வதற்கென நியமிக்கப்பெறல்வேண்டும். அன்னார்க்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100 (ரூபா நூறு) வீதம் உதவித் தொகை அளிக்கப்பெறும். எவ்வித காரணத்தாலாவது கும்பகோணத்துக்கு அருகில் உள்ள சுவாமிமலையில் ஸ்ரீ சுவாமிநாத சுவாமியைப் பூசனை புரியும் சிவப்பிராமணர் புதுடில்லியில் ஷெ மந்திரில் பூசனை செய்ய இயலாமல் வேறு யாரேனும் நியமிக்கப்பெற்று நித்தியபூசனை நடத்தப்பெறின் அன்னார்க்கு மாதம் ஒன்றுக்கு ரூ 75–00 (ரூபா எழுபத்தைந்து) வீதமே உதவித் தொகையாக அளிக்கப்பெறும்.

இ. மேலே குறிப்பிட்ட சுவாமிமலை சிவப்பிராமணர் புதுடில்லியில் ஷெ ஸ்ரீ சுவாமிநாத மந்திரத்தைப் பரிபாலனம் செய்வார்தரும் ஊதியத்துடன் இதனையும பெறக்கடவர்.

ஈ. மாதந்தோறும் ஷெ சிவப்பிராமணர் தாம் ஷெ மந்திரில் பூசனை செய்ததாக ஷெ சுவாமிநாத சுவாமி மந்திரைப் பரிபாலனம் செய்யும் குழுத்தலைவா அல்லது காரியதரிசியிடம் இருந்து அத்தாட்சி பெற்று அனுப்பினால் எத்தனை நாட்கள் பூசனை செய்ததாக அத்தாட்சி வருகிறதோ அத்தனை நாட்களுக்கு மட்டும் உரிய உதவித்தொகையை மாதந்தோறும் ஷெ சிவப் பிராமணர்க்கே அனுப்பிவைக்கப்பெறும்.

உ. ஷெ சிவப்பிராமணர் பூசனை செய்யமுடியாமல் பதிலுக்குப்பிறர் பூசனை செய்தால் பதிலுக்குப் பூசனை செய்தவர்க்கு அவர் பூசனை செய்த நாட்களுக்கு மட்டும் நாளொன்றுக்கு ரூ. 2–50 வீதம் அளிக்கப்பெறும்.

ஊ. மேலே குறிப்பிட்டவாறு புதுடில்லிக்குச் சிவப்பிராமணர் உதவித்தொகை அனுப்பியபிறகு எஞ்சியுள்ள தொகையில் கும்பகோணத்துக்கு அருகிலுள்ள சுவாமிமலையில் ஸ்ரீசுவாமிநாத

சுவாமி பூசனை புரியும் சிவப்பிராமணர் ஒருவர் காசியாத்திரை செய்ய உதவித் தொகை ரூ 200 அளிக்கப்பெறும்.

எ. மேலும் தொகை எஞ்சுமாயின் எஞ்சிய தொகையைக் கும்பகோணத்துக்கு அருகிலுள்ள சுவாமிமலையில் ஸ்ரீ சுவாமி நாதப் பெருமானைப் பூசை செய்யும் சிவாச்சாரியர்களுக்கு நாம் குறிப்பிடும் ஒரு விசேட தினதகில் அன்னம்பாலிப்பு நடத்தப் பயன்படுத்தப் பெறும்.

4. அ. ஷெ சிவாசசாரியார் உதவித் தொகை புதுடில்லி யில் ஸ்ரீசுவாமிநாத சுவாமி மந்திர் கட்டிப்பூர்த்தி பெற்ற பிறகே அளிககப் பெறும். அதுவரையில் மாதம் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் 1966-ம் வருஷம் டிசம்பர் 31-ந்தேதி வரை அல்லது அதற்கு முன் டில்லியில் ஸ்ரீசுவாமிநாத சுவாமி மந்திர் கட்டுகிற வரையில் புதுடில்லி இராம கிருஷ்ணபுரத்தில் ஸ்ரீ சுவாமிநாத சுவாமி சேவா சமாஜத்திற்கு ஷெ ஸ்ரீ சுவாமிநாத சுவாமி மந்திர் கட்டும் செலவிற்கு ஆக அனுப்பப் பெற்று வரும்.

ஆ 31-12-1966க்கு அப்பாலும் ஷெ மந்திர் நிர்மாணம் செய்வதில் காலதாமதம் ஏற்படுமாயின் 31-12-1966க்கு மேல் மந்திர்கட்டிப் பூர்த்தியாகிறவரையில் ஷெ தொகை கும்ப கோணத்துக்கு அருகிலுள்ள சுவாமிமலையில் ஸ்ரீசுவாநாத சுவாமிக்குப் பூசனை புரியும் சிவப்பிராமணர்களுக்கு நம்மால் தயாரிக்கப் பெறும் திட்ட ஜாபிதாவின் படி அன்னம்பாலிப்பு நடத்தப் பயன்படுத்தப் பெறும்.

5. புதுடில்லியில் ஸ்ரீசுவாமிநாத சுவாமி மந்திர் நிர் மாணிக்கப் பெற்றுச் சிவப்பிராமணர் நியமிக்கப் பெற்றதும் மேல் மூன்றுவது பாராவில் குறித்தவண்ணம் உதவித் தொகை அனுப்பப்பெற்றுவரும்.

6. ஆண்டு வருமானத்துக்கு ஏற்ப ஷெ தொகைகள் வகை யறு நமது விருப்பம்போல் கூட்டவும் குறைக்கவும் பெறும்.

7. இவ்வருமானம் மேலே குறிப்பிட்ட செலவினங்கட் கன்றி வேறு எம்முறையிலும் மாற்றியமைக்கப் பெறமாட்டாது.

8. இதிற் குறித்த சொத்து நமது சுவாதீனத்திலும் பரிபாலனத்திலும் நமக்குப்பின உரிமையுள்ளவர்கள் சுவாதீனத்திலும் பரிபாலனத்திலுமே இருந்துவரும்.

9. இச்சொத்துக்களின் உத்தேச மதிப்பு ரூ. 30,000; உத்தேச ஆண்டு வருமானம் ரூ. 1500.

ஷெடியூல்

தஞ்சாவூர் ரிஜிஸ்தரேஷன் டிஸ்டிரிக்ட்டு திருவிடைமருதூர் சப் ரிஜிஸ்தரைச் சேர்ந்த கும்பகோணம் தாலுக்கா, 44 சூரிய மூலை வட்டம், சூரியமூலை கிராமத்தில்.

நெ.	ரி சாவே நெ.	விவரம்	விஸ்தீரணம் ஏ.	செ.
1.	161	நன்செய்	3	19
2.	162 - 1	,,	3	73
3.	163	,,	5	00
4.	165 - 3	,,	0	08
5.	165 - 3	,,	3	06
6.	165 - 5	,,	1	26
7.	167 - 2	,,	3	88
8.	165 - 2	புன்செயில் நன்செய்	0	52
		ஆக.	20	78

ஏக்கர் இருபது, எழுபத்தெட்டு செண்ட்.

Tirupanandal
Dated 5-10-1963 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

Registered in the Tiruvidaimarudur Sub Registrar's office as No, 2167 of Book I Volume 1181 pages 84 to 87 on 7-10-1963.

Resolution Passed at The Meeting of The Board of Management, Sree Swaminatha Swami Samaj (Regd) HELD ON THE 17th OCTOBER 1963

"Resolved that sincere and heartfelt gratitude and thanks of the Samaj and those connected with it be conveyed to **His Holiness Sri La Sri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal** of Kasimutt, Tirupanandal for the continued and abiding interest and encouragement of Swamji in the matter of construction of Sree Swaminatha Swami temple in Uttara Swamimalai in the capital of our country. The Samaj rejoices with profound humility and devotion at the new endowment created by Swamiji entitled "Remuneration to Panda (Siva charya Endowment at Swaminatha Swami Mandir) New Delhi" for Rs. 30,000/- it is indeed a matter of great pleasure to note the great foresight of His Holiness in providing now itself for the items usually required after the temple comes into existence e. g. appointment of an Oduwar, endowment for engagement of Siva Charya etc. The Samaj are aware that these two endowments have created, will create in the minds of devotees the necessary confidence in the holy project of erection of the temple for Lord Swaminatha and hope that devotees would come forward to donate liberally for fulfilment of this aim.

The Samaj also sincerely thanks His Holiness for the endowment by which the sale proceeds of Kasimutt's publication "Thayumanswamigal Padalgal" have been earmarked for the construction of the temple for Lord Swaminatha here.

The Samaj sincerely hopes that by the Grace of Lord Senthilandavan and through the Blessings of His Holiness the holy task undertaken by it would be completed ere long.

(True Copy)

(Sd.) M. S. V. RAMAN
Col.
Vice President.